உ


குருபாதம்

# புட்ப பலன்

[ மூலமும் பொழிப்புரையும் ]

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.

அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
(1982) சீர்காழி.



தருமையாதீனம்

1973



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண். 648.

உ

சிவமயம்

# புட்ப பலன்

[ மூலமும் பொழிப்புரையும் ]

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவுளப்பாங்கின்வண்ணம்

**ஆவணிமூல விழா மலராக**

"ஞானசம்பந்தம் பதிப்பகம்" அறக்கட்டளையில்

வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம் ] 1973 [ விலை : 75 பைசா

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

# முன்னுரை

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" - எனக் கூறிய பெருஞ்சிறப்பினை உடையது பூசை ஒன்றே. இதற்கு முதற்கண் வேண்டப் படுவது பூ. நீர்கூடப் பூவிற்கு அடுத்துள்ளதே. அபிடேகத்திற்கு உரிய நீரை முதலில் பூவால் அருச்சனை செய்தே அபிடேகிப்பர். அவ்வாறு அபிடேகிப்பதற்கு முன்பு மூர்த்தியின் சிரசில் பூவை இட்டு, அதன்பின்பே அபிடேகம் செய்வர். இவ்வாறு பலவகையிலும் பூசையில் பூ முன்னிற்றலைக் காணலாம். "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு", "போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்" என்றாற்போலும் அருட்டிரு மொழிகளிலும் பூவே முதலிடம் பெற்றுள்ளது. எனவே' இத்தகைய பூவை இறைவனுக்குச் சாத்துதலால் விளையும் பயன் யாது' என அறிய விரும்பும் விருப்பம் அன்பர்களது உள்ளத்தில் எழுதல் இயல்பே. அதனால், அவ்விருப்பத்தினை நிறைவு செய்தாலே அவர்களது உள்ளம் அமைதியுற்றுப் பூசை செய்தலில் இனிது செல்லும். அங்ஙனம் செல்லுதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது 'புட்ப பலன்' என்னும் இந்நூல்.

இத்தகைய அரும்பொருளைக் கூறுகின்ற நூல் எதுவும் இன்று கிடைத்தற்கு அரிதாகவே உள்ளது. அந்நிலையில் கிடைத்த ஒன்றாகும் இந்நூல். தருமையாதீனத்தின் ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தரது குருபூஜைப் பெருவிழாவிற்கு வந்து சிவ மூர்த்திகளையும், குருமூர்த்திகளையும் வணங்கி, விழாவின் பல சிறப்புக்களையும் கண்டு களித்துப் பயன் பெற்ற சைவப் பேரன்பர் மதுரைத் திருவாலவாய்ச்

சைவ சித்தாந்த சபைச் செயலர் திரு சு கோவிந்தசாமி அவர்கள் தம்மிடம் இருந்த இந்நூலின் ஒரே பிரதியை ஆதீன வெளியீடாகவெளியிடுமாறுவேண்டி அடியேனுக்குஅனுப்பி வைத்தார். சமையம் வாய்த்த பொழுது தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருமுன்பில் அடியேன் இதுபற்றி விண்ணப்பித்துக் கொண்டபொழுது, இந்நூல் ஆவணிமூல விழா மலராக வெளிவரத் திருவுளம் பாலித் தருளினர்கள். அவ்வருளிப்பாட்டின் வண்ணமே இஃது ஆதீன வெளியீடாக இதுபொழுது வெளிவருகின்றது. மதுரை அன்பர் தந்த நூல் ஒன்று, மதுரைச் சொக்கநாதப் பெருமானது ஆவணிமூல விழாவில் வெளிவருவது திருவருட் பொருத்தமே.

இந்நூல் சென்னை ரிப்பன் அச்சகத்தில் வெளிவந்தது எனத் தெரிகின்றது. ஆயினும், வெளிவந்த ஆண்டு அறியக் கூடவில்லை. மேலும் இதன் முதற்பக்கத்தில், " இது ஓர் எட்டுப் பிரதியினின்று கிடைத்தது. ஆசிரியர் பெயர் விளங்கவில்லை " என்ற ஓர் அடிக்குறிப்புக் காணப் படுகின்றது. அதனல், இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் முதலியவற்றையும் அறியக்கூடவில்லை. கிடைத்த ரிப்பன் அச்சகப் பதிப்பில் பிழை மலிந்திருந்தமை, அவர்கட்குக் கிடைத்த ஏட்டுப் பிரதியின் தன்மையால் ஆயது என்று எண்ண வேண்டியுள்ளது.

இந்நூலின்கண் கவித்துவம் சிறந்து காணப்படவில்லை. பாடல்கள் மிக எளியநடையில், ஒரே வகையான யாப்பில், பெரும்பான்மையும் ஒரே வகையான பொருளமைதியுடன் காணப்படுகின்றன. காப்புச் செய்யுள் ஏதும் இல்லாமலே இந்நூல் தொடங்கியிருப்பது வியப்புக்குரியதாகின்றது. ஒருவேளை காப்புச் செய்யுள் இருந்த ஏடு கிடையாமற் போய்விட்டதோ என்ற ஐயம் எழுகின்றது. காப்புச்

செய்யுளே கிடையாமையால், இந்நூல் எதனை முதலாகக் கொண்டு எழுந்தது என்பது போன்ற விளக்கங்களும் பெறப்படவில்லை. எனினும் இதனை இயற்றிய ஆசிரியர் சிவபத்தி மிகுதியும், சிவபூசையும், சிவத்தொண்டும் உடையவர் எனக் கருத இடம் உள்ளது.

இந்நூலை, 'ஒரு பூவிற்கு ஒரு பாட்டு' என்ற வகையில் யாத்திருப்பது ஓர் அரிய முயற்சி. புட்ப பலன் கூறுவதற்கு முன் நந்தவனம் வைத்தற் பலனைக் கூறித் தொடங்குகின்றார். பின்பு பூக்களை, 'கோட்டுப் பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ' எனப் பிரித்துக் காட்டிப் பின் அம்முறையே பல பூக்களையும், பின் பல பத்திரங்களையும் கூறுகின்றார்.

கோட்டுப் பூக்களில் இருபத்து இரண்டு கூறுகின்றார்; அவை பவளக்கொன்றை, செண்பகம், புன்னை, குருந்து, மகிழ், மந்தாரை, செங்கழுநீர், கிண்கிணிமந்தாரை, பாரிசாதம், பன்னீர், வெண்பாதிரி, செம்பாதிரி, குரா, கோங்கு, தாழை, செந்தாழை, ஆத்தி, கொன்றாத்தி, மஞ்சள் ஆத்தி, வாகை, குருக்கத்தி, செருந்தி, என்பன.

கொடிப்பூக்களில் பத்துக் கூறுகின்றார்; அவை தாளி, முல்லை, மல்லிகை, அடுக்கு மல்லிகை, அனங்க மல்லிகை, குட மல்லிகை, இருவாட்சி, சங்கவர்த்தனம், பிச்சி, வல்லிசாதம் என்பன.

நீர்ப்பூக்களில் ஐந்து கூறுகின்றார்: அவை செந்தாமரை, வெண்டாமரை, செங்குவளை, கருங்குவளை, நெய்தல் என்பன.

நிலப்பூக்களில் இருபத்தைந்து கூறுகின்றார்; அவை தும்பை, புலிநகக்கொன்றை, வெட்சி, கொக்கு மந்தாரை, மாதுளை, பட்டுஅலரி, செவ்வலரி, அடுக்கு அலரி, வெள்ளை அடுக்கு அலரி, வெள்ளலரி, கஸ்தூரி அலரி, குங்கும அலரி,

செவ்வரத்தை, சூரியகாந்தி, நந்தியாவட்டம், செவ்வந்தி, வெள்ளெருக்கு. வெண்பட்டி, மாணிக்கப்பட்டி, பொன் ஆவிரை, வெள்ளூமத்தை, பொன்னூமத்தை, கருவூமத்தை, வழுதலை, எள்ளு, என்பன.

பத்திரங்கள் இருபத்தேழு கூறுகின்றார்; அவை வில்வம், துளசி, மருக்கொழுந்து, நாயுருவி, பூளை, நொச்சி கரந்தை, செங்கீரை, மாசிப்பச்சை, மலைப்பச்சை, திருநீற்றுப்பச்சை, எலுமிச்சம்பச்சை, சமுத்திராப்பச்சை, கதிர்ப் பச்சை, கொண்டை, குடத்தன் குதம்பை, வன்னி, கிளுவை, மாவிலிங்கை, விளா, மா, எலுமிச்சை, நாரத்தை, நாவல், மருது, நெல்லி, இலந்தை என்பன.

இளநீர்களில் நான்குவகை கூறுகின்றார். அவை பச்சிளநீர், செவ்விளநீர், சூரியகௌளி இளநீர், சந்திர கௌளி இளநீர் என்பன.

மற்றும் சந்தனக் கட்டை அகிற்கட்டைகள், மா பலா வாழை என்னும் முக்கனிகள் முதலியவற்றை இறைவனுக்கு ஆக்குதலின் பயன்களையும் இதனுட் கூறியுள்ளார்.

மகளிர் இன்பத்தோடு மற்றும் அரசச்செல்வம், சுவர்க்க லோக இன்பம், இந்திரன், அயன், மால் முதலியோரது பதவிகள் முதலாக எத்துணையோ பயன்களைப் புட்பங்களைக் கொண்டு பெறலாம் என்று கூறிவருகின்ற இவர், பெரும்பாலும் எல்லாப் புட்பங்களாலும் முடிவில் சிவலோகம் பெறுவர் என்பதை மறவாமற் கூறிவருதல் பெரிதும்போற்றியுணரத்தக்கதாய் உள்ளது. ஏனெனில், சிவபுண்ணியம் எத்துணைச் சிறியதாயினும், அஃது அழிகின்ற சிறிய இன்பத்தைத் தருதலோடு ஒழியாது, முடிவில் பதமுத்தியுடன், அழிவிலா ஞானத்தைக் கொடுத்துப் பரமுத்தியையும் தருவதாகும்.

இந்நூலை உணருமிடத்து 'பூக்களைக் கொண்டு சிவ பூசை செய்யுமிடத்து அவற்றின் பயனாக எண்ணற்ற உலகங்களில் எண்ணற்ற காலம் தங்கி, எண்ணற்ற போகங்களை நுகர்ந்த பின்னரே முத்தி கிடைக்கும்போலும்' என்று எண்ணத்தோன்றும். அவ்வாறன்று; இறைவன் "வேண்டுவார் வேண்டுவதே ஈபவன்" ஆதலின், 'போகத்தில் விருப்பம் உடையவர்கட்கே அப் போகங்களைத் தருவான்' என்பதே கருத்து. போகத்தில் விருப்பம் இல்லாது மோட்சத்தையே விரும்புபவர்கட்கு அம்மோட்சத்தையே அவன் தந்தருளுவான்.

"அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரை நீ"

என்ற அப்பர் திருவாக்கின்படி, காமியமாகவோ, நிட்காமியமாகவோ இறைவனைத் தவறாமல் வழிபடல்வேண்டும் என்பதே சாத்திரங்களின் கருத்து. அதனால் இந்நூற்கும் அதுவே கருத்தாகும்.

'புட்ப பலன்' என்பதே நூற்கருத்தாயினும், பூசைக்குரிய பிற பொருள்களால் அடையும் பயன்கள் சிலவும், விதிவிலக்குக்கள் சிலவும் இதன்கண் உடன் கூறப்படுகின்றன; அவை பயனுடையனவேயாம்.

"பாடல்கள் மிக எளிய நடையில் இருப்பினும், உரை ஒன்றும் உடன் இருத்தல் இன்னும் பலருக்குப் பயன்படுவதாகும்" என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளம் பற்றியவண்ணம் அடியேனால் எழுதப்பட்ட மிகச்சுருக்கமான பொழிப்புரை ஒன்றும் நூலுடன் சேர்க்கப் பெற்றுள்ளது. நூலிற் சொல்லப்பட்ட புட்ப வகைகளிலும், பிறவற்றிலும் சில, இந்நாளில் இன்னவெனை அறியக்கூடதனவாய் உள்ளன; அதனால் அவை உரையிலும் அங்ஙனமே

குறிக்கப்பட்டுள்ளன. அவைகளில் எவற்றையேனும் அறிந்தவர் அறிவிப்பார்களாயின், வாய்ப்பு நேரும் பொழுது உரையில் சேர்க்கலாகும்.

அருளாட்சி ஏற்றருளியபின் தங்களது முதலாவது ஜென்மநட்சத்திரவிழா மலராகப் 'புட்பவிதியை' வெளிவரத் திருவுளம் பாலித்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 'புட்ப பலனை' இவ்வாண்டு ஆவணிமூல விழாமலராக வெளிவரத் திருவருள் பாலித்தருளினமை அன்பர் பலர்க்கும் மிக்க பயன் தருவதாகும்.

பலன்கள் பலவற்றையும் கூறுவதாகிய இந்நூலைப் பலரும் பெற்றுக் குருவருளாலும், திருவருளாலும் பலன் எய்தி இன்புறுக. இவ் வெளியீட்டிற்கு மூலப் பிரதியை மிக விருப்பத்துடன் தந்த அன்பர் திரு. தி. சு. கோவிந்தசாமி அவர்கட்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசியும், ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானது திருவருளும் நலம் பல நல்குவனவாக.

இங்ஙனம்,

அடியேன்,

தருமபுரம்,
6-9-1973.

**சி. அருணைவடிவேல்**
ஆதீனப்புலவர், தருமையாதீனம்.

உ

சிவமயம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாறு

“ தமிழ்மணங் கமழும் கமலையம் பதிவாழ்
ஞானசம் பந்தனை வணங்கின்
ஈனசம் பந்தம் இல்லைவீ டெளிதே ”

தென்பாண்டி நாட்டிலே ஸ்ரீவில்லிபுத்தூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் கற்பிற் சிறந்த மீனாட்சி அம்மையை மணந்து வாழ்வாங்கு வாழ்ந்துவந்தார். எல்லா நலங்களும் இருந்தும் மகப்பேறு இல்லாக் குறை மனத்தை வருத்தியது. குலதெய்வமாகவும் ஆன்மார்த்தமூர்த்தியாகவும் உள்ள ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானிடத்து நாளும் குறையை விண்ணப்பித்துச் சிறப்பொடு பூசனை புரிந்து வந்தார். சொக்கேசர் திருவருளால் மீனாட்சியம்மையிடத்து ஞானக் குழந்தை சோமவார நாளன்று உதித்தது. திருஞான சம்பந்தரைப்போல இக்குழந்தையும் சிவம் பெருக்கவேண்டும் என எண்ணிய தாய் தந்தையர்கள் குழந்தைக்கு ‘ ஞானசம்பந்தர் ’ எனப் பெயரிட்டனர்.

ஞானசம்பந்தர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். ஐந்தாண்டுப் பிராயத்தில் கலை பயிலத் தொடங்குவித்தனர். ஞானசம்பந்தர் கலைஞானம் யாவும் கல்லாமலே கற்ருர். அதுகண்டு பெற்ருேர் வியப்புற்றனர். தமது ஆன்மார்த்த மூர்த்தியைத் தரிசிக்க எண்ணி ஆலவாய்ப்பதிக்குத் தம் ஞானப்புதல்வரையும் உடனழைத்துப் புறப்பட்டனர். அங்கயற்கண்ணி தன்ெனுடும் அமர்ந்த ஆலவாய்ப்பதியை அடைந்தனர்.

பொற்றாமரைப் பொய்கையில் நீராடி, புலவர் திலகமாக உள்ள ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானையும் தீந்தமிழின் சுவையாக உள்ள ஸ்ரீ மீனுட்சி அம்மையையும் வணங்கி வழிபட்டுச் சிலநாள் மதுரையிலேயே தங்கினர் பிறகு பெற்றோர் ஸ்ரீவில்லிபுத்தூர் செல்ல எண்ணி ஆலவாய் அண்ணலிடம் விடைபெற்றனர். ஞானசம்பந்தர் மீது சொக்கேசர் திருவருள் பதிந்தமையால், ஞானசம்பந்தர் பெற்றோர்களைப் பார்த்து, 'தொடர்ந்து நின்ற தாயும் தந்தையும் இத் திருக்கோயிலில் வீற்றிருக்க அவர்களை விட்டு எப்படிப் பிரிவேன்? என்னுடலுக்குத் தாயுந் தந்தையுமாகிய உங்களுடன்வர இயலாது' என்று கூறினர். அதுகேட்ட பெற்றோர் கலங்கினரேனும், திருவருளால் கிடைத்த குழந்தை திருவருளைப் பெருக்க முற்படுகிறது. இதுவும் இறைவன் திருவருள்போலும் எனத்தெளிந்தனர். ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பினர்.

ஞானசம்பந்தர் வழக்கம்போல் ஒருநாள் பொற்றாமரையில் நீராடச் சென்றார். கரையில் தொண்டர்கள் பலர் சிவபூசை புரிவதைக் கண்டுத் தாமும் அவ்வாறு சிவபூசை புரிய எண்ணினர். எண்ணத்தை இறைவன் சந்நிதானத்தில் விண்ணப்பித்தார். கருத்தறிந்து முடிக்கும் கருணை வள்ளல் அன்றிரவு ஞானசம்பந்தர் கனவில் தோன்றி 'ஞானசம்பந்தா! நீ விரும்பியவண்ணம் நாம் சிவலிங்கத் திருமேனி கொண்டு பொற்றாமரைத் தடாகத்தில் ஈசான மூலையில் கங்கைக்குள் இருக்கிறோம். நாளைக் காலையில் வந்து நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருள்பாலித்தார். துயிலுணர்ந்த ஞானசம்பந்தர் சொக்கேசர் பணித்த வண்ணமே பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கிச் சிவலிங்கத் திருமேனியைக் கண்ணுக்கினிய பொருளாகப்பெற்றார். பூசனை முறை அறிய ஆசாரியன் வேண்டுமேஎன எண்ணி ஆலவாயண்ணலிடம் முறையிட்டார். சொக்கேசர்

அன்றிரவு ஞானசம்பந்தர் கனவில் எழுந்தருளிவந்து, 'ஞானசம்பந்தா! நமது உபதேச பரம்பரையில் வந்தவர் திருவாரூர் ஞானப்பிரகாசர்; அவரிடம் சென்று உபதேசம் பெற்று நம்மை விதிப்படி பூசிப்பாயாக' என அருளினர். அவ்வண்ணமே கமலை ஞானப்பிரகாசருக்கும் கனவில் தோன்றி, வருகிற சோமவாரத்தன்று ஞானசம்பந்தனுக்கு விதிப்படி ஞானோபதேசம் செய்து சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொடுக்க' என அருளினர்.

ஞானசம்பந்தர் காலையில் எழுந்து திருவாரூருக்குப் புறப்பட்டார். திருவானைக்கா முதலிய தலங்களை வணங்கிச் சோமவாரத்தன்று காலையிலேயே திருவாரூர் சேர்ந்தார். கமலாலயத்தில் நீராடித் திருக்கோயில் சேர்ந்து வலம் வந்த ஞானசம்பந்தர், சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் சிவயோகத்தில் அமர்ந்து இருந்த ஞானப்பிரகாசரைக் கண்டவுடன் காந்தங்கண்ட இரும்பைப்போல், இவரே தமது ஆசாரியன் என்றுணர்ந்து திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். ஞானப்பிரகாசரும் ஞானோபதேசம் செய்து சொக்கநாதர்பூசையும் எழுந்தருளப்பண்ணிக்கொடுத்தார்.

வழக்கம்போல் திருக்கோயிலுக்கு எழுந்தருளிய ஞானப் பிரகாசர் ஒருநாள் வழிபாடு முடித்து அர்த்தயாமம் ஆகும் வரையில் சித்தீச்சுரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் சிவ யோகத்திலிருந்து அர்த்தயாம பூசையைத் தரிசித்து வீடு திரும்பினர். திரும்புகையில் கைவிளக்குப் பணிவிடைக் காரன் உறங்கிவிட, அக் கைவிளக்குப் பணியை ஞான சம்பந்தரே மிக்க மகிழ்ச்சியுடன் மேற்கொண்டார். வீடு சேர்ந்த ஞானப்பிரகாசர் 'நிற்க' எனப்பணித்து உள்ளே சென்றார். ஞானசம்பந்தர், 'ஆசாரியன் ஆணை, நிற்க என்பதுதானே; என்று எண்ணியவராய் அவரால் நிலை நிறுத்தப்பெற்ற சிவயோக சமாதியிலே நின்றார். அன்றிரவு பெருமழை பெய்தும் ஞானசம்பந்தர் மீது ஒருதுளி கூடப்

படவில்லை. விளக்கோ சுடர்விட்டெரிந்தது. விடியலில் இந்நிலைகண்ட குருபத்தினியார் குருவுக்குத் தெரிவிக்க ஞானப்பிரகாசரும் ஞானசம்பந்தரது பெருநிலை கண்டு வியந்து 'அப்பனே! நீ ஆசாரியனாகும் தகுதியுடையாய்; ஆகவே நீ மாயூரத்திற்கு அண்மையில் உள்ளதும் தருமரால் பூசிக்கப்பெற்றதும், வில்வாரண்ய க்ஷேத்திர முமான தருமபுரத்தில் அமர்ந்து பக்குவ ஆன்மாக்கட்கு உண்மையை உபதேசவாயிலாக உணர்த்துவாயாக' என ஆணைதந்தனர். இது முதலாக ஞானசம்பந்தர் குருஞான சம்பந்தராயினார். "தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்" என்பதை நினைத்தார். ஆசாரியர் ஆணையை சிரமேற்கொண்டார். தருமபுரம் சார்ந்தார். பல்லாண்டுகள் தருமபுரத்தில் வீற்றிருந்து பல உயிர்கட்கு உபதேச வாயிலாக உண்மை உணர்த்தினார். சைவசித்தாந்தத்தைத் தக்க முறையில் பரவச்செய்தார். தமது பேரின்ப அநுப வத்தை எல்லோரும் அநுபவிக்கவேண்டிப் பாடல்கள் வாயிலாக அவற்றை அருளிச்செய்தார், அவை சிவபோக சாரம், சொக்கநாதவெண்பா, முத்திநிச்சயம், சொக்கநாதர் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை முதலிய எட்டு நூல் களாய் இலங்குகின்றன. இவை பண்டார சாத்திரம் எனப் பகரப்பெறும்.

இவ்வாறு பல்லாண்டு ஞான அரசாட்சி புரிந்த குரு ஞானசம்பந்தர் சிவசமாதி கூடத் திருவுளங்கொண்டார். தமது சீடர்களில் அதிதீவிர நிலையில் உள்ள ஆனந்த பரவசருக்கு ஞானோபதேசம் செய்து தமது பீடாதிபத்தி யத்தை ஒப்புவித்துச் சிவசமாதி கூடினார். அதிதீவிர நிலையி லிருந்த ஆனந்தபரவசர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் கோயிலில் மேல்பால் சிவசமாதி கூடிவிட்டார். அஃதறிந்த ஏனைய சீடர்கள் குருஞானசம்பந்தர் சந்நிதிசேர்ந்து தங்களுக்குக் குருநாதன் இல்லை என்ற குறையைப் போக்கிக் குரு சந்தான பரம்பரை நீடு வாழ அருள்புரிய வேண்டினர்.

குருஞான சம்பந்தர் சமாதி நிலையினின்றும் பிரிந்துவந்து தமது சீடர்களுள் ஒருவரான சச்சிதானந்தருக்கு ஞான தீக்ஷை செய்து ஞானசமாதி கைகூடச்செய்து அவரைப் பீடத்திலமர்த்தி வைகாசி மாதம் கிருஷ்ணபக்க ஷஷ்டி திதியில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவலிங்கத் திருவுருவின் அடியில் சிவசமாதி கூடினர்.

கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற இத் திருத்தருமையாதீனம் மொழித் தொண்டும், சமயத்தொண்டும், சமூகத்தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றிவருகிறது. இப்பொழுது ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிபவர்களாகிய இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் திருப்பெயரில் நிறுவப்பெற்றுள்ள "ஞான சம்பந்தம் பதிப்பகம்" அறக்கட்டளையிலிருந்து இந்நூல் வெளியிடப்பெறுகிறது. இதனை அன்பர்கள் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

உ

குருபாதம்

# சொக்கநாத வெண்பா

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுராபுரி யுமையாள்
அத்தனே ஆலவா யா.

— குருஞானசம்பந்தர்.



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

# புட்ப பலன்

## திருநந்தவனச் சிறப்பு

1. நந்தன வனத்தில் ஈசன்,
நல்உமை, விநாய கன்,முன்
கந்தன்,ஆ தித்த ராதிக்
கடவுளர், முனிவர், சித்தர்,
அந்தம்இல் கணங்க ளாதி
யானதே வதைகள் எல்லாம்
எந்தநா ளும்சேர்ந் தங்கே
யினிதினில் இருந்து வாழ்வார். (1)

உரை :- (புட்ப பலன் கூற எடுத்துக் கொண்டவர் முதற்கண் ஒரு செய்யுளால் புட்பத்தைத் தருகின்ற நந்தன வனச் சிறப்புக் கூறுகின்றார்.) திருநந்தன வனத்தில் சிவ பெருமான், உமாதேவி, விநாயகர், முருகர், பன்னிரு சூரியர் முதலிய முப்பத்து முக்கோடி தேவர்கள், முனிவர் கள், சித்தர்கள், அளவற்ற பதினெண் கணத்தவர் முதலிய பலரும் மகிழ்வுடன் வந்து தங்கியிருப்பர். (ஆகவே, திருநந்தனவனம் சிவலோகத்தோடு ஒப்பதாகும்.)

குறிப்பு :- 'திருநந்தன வனம்' என்பது சிவபெருமா னுக்கு என்று வைக்கப்பட்ட நந்த வனத்திற்கே பெயர். மற்றைய தேவர்களுக்கு வைக்கப்பட்டவை, வாளா, 'நந்த

**வனம்'** எனப்படும். மக்களுக்குரியவை, 'பூந்தோட்டம், **பூங்கா**, உத்தியான வனம்' முதலிய பெயர்களால் சொல்லப் **படும்.**

## திருநந்தவனம் வைத்தற் பயன்

**2.** சிவன்றனக் கென்று வைத்த
திருநந்த வனத்தைப் பார்த்தே
உவந்துளோர், கூலி வேலை
உஞற்றினோ ரெல்லாம், செய்தோர்
நிவந்திடும் பலத்திற் பத்தில்
நீடும்ஓர் கூற டைந்தே
தவந்தரும் மறுபவத்தே தமதுபூ
வனமே வைப்பார். (1)

உரை :- (இனி மூன்று செய்யுட்களால் திருநந்தன வனம் வைத்தற் பயன் கூறுகின்றார்.) சிவபெருமானுக்கு உரியதாக வைக்கப்பட்ட திருநந்தன வனத்தை மகிழ்ச்சி யுடன் பாதுகாப்பவர், அதற்கான வேலைகளைக் கூலிக் கேனும் செய்பவர் முதலியோர், அந்த நந்த வனத்தை வைத்தோர் அடையும் பயனில் பத்தில் ஒரு பங்கு பெற்று, மறு பிறப்பில் தாங்களே நந்தவனம் வைத்து வளர்க்கும் நிலையைப் பெறுவார்கள்.

**3.** திருநந்த வனமே வைக்கச்
சிந்தித்து மனையி னின்றும்
ஒருமண்வெட் டியினை வாங்க
ஓரடி வெளியில் வைத்தோர்
உருவந்த **சென்**மந் தன்னில்
உற்றபா வங்கள் எல்லாம்
பருவூந்து தொலையும் என்றால்,
பண்ணினோர்க் கென்ன சொல்வாம்! (2)

உரை :- திருநந்தன வனம் வைக்கக் கருதி அதன் பொருட்டு ஒரு மண்வெட்டியை வாங்கப் புறப்பட்டு வெளியில் ஓர் அடி எடுத்து வைத்தவர்களே அந்தப் பிறப்பில் செய்த பாவங்கள் மெலிந்து ஒழியத் தூயராவர் என்ருல், திருநந்தன வனத்தை வைத்து வளர்த்தோர் அடையும் பயனை எத்தகையது என்று சொல்லமுடியும் !

4. பூவனம் செய்து ளார்க்கப்
பூவினல் செய்தோர் பூசை
மேவிய பலத்திற் பாதி
விரைந்தடைந் திடும்;வி ரும்பும்
பூவனத் துற்ற பூவிற்
பொருந்திய யாவும் ஈசன்
தூவருச் சனைக்கே யன்றித்
தொடலாகா தொருவ ருக்கும். (3)

உரை :- திருநந்தன வனம் வைத்தவர் அதில் உண்டாகும் பூவைக் கொண்டுபோய்ச் சிவபெருமானுக்குச் சாத்தி வழிபடுவோர் அடையும் பயனில் பாதியளவான பயனை அடைவார்கள்.

'சிவபெருமானுக்கு' என்று வைக்கப்பட்ட நந்தவனத்தில் உண்டாகும் பூவைச் சிவபெருமானுக்குத் தவிரப் பிற கடவுளருக்குச் சாத்துதல் கூடாது.

குறிப்பு :- 'பாதி பலன்' என்றது அளவைக் குறித்ததேயன்றி, பங்கிடுதலைக் குறிக்கவில்லை. எனவே, 'தாங்களே வைத்த நந்தன வனத்தில் உள்ள பூவைக் கொண்டு வழிபடுவோர் பெரும்பயன் அடைவர்' என்பது விளங்குவதாம்.

உமாதேவியும், விநாயகர் முருகர் ஆகிய சிவகுமாரரும் சிவபெருமான் கூற்றினரே யாதலால், 'சிவபெருமானுக்குரிய நந்தவனத்துப் பூவை அவர்கட்குச் சாத்துதல் குற்ற

மாகாது' என்பது, 'ஏற்புழிக் கோடலால்' உணர்ந்து கொள்ளப்படும்.

## நால்வகைப் பூக்களும் அவற்றில் சிறந்தனவும்

5. கோட்டுப்பூக் கொடிப்பூ நீர்ப்பூக்
குலவிய நிலப்பூ நான்காம்;
கோட்டுப்பூ வதனில் கொன்றை;
கொடிப்பூவில் தாளி யாகும்;
நீட்டுநீர்ப் பூவில் நீலோற்
பலமாகும்; நிலப்பூத் தன்னில்
நாட்டிய தும்பை தானே
நவில்வதில் அதிக மாகும். (4)

உரை :- (இவ்வொரு செய்யுளால் பூக்களின் வகையும், அவற்றுட் சிறந்தனவும் கூறுகின்றார்.) 'கோட்டுப் பூ, கொடிப் பூ, நீர்ப் பூ, நிலப் பூ' எனப் பூக்கள் நான்கு வகைப்படும். கோட்டுப் பூக்களில் கொன்றைப் பூச் சிறந்தது, கொடிப் பூக்களில் தாளிப் பூச் சிறந்தது. நீர்ப் பூக்களில் நீலோற்பலப் பூச் சிறந்தது. நிலப் பூக்களில் தும்பைப் பூச் சிறந்தது.

குறிப்பு :- கோடு - மரக் கிளை. தாமரை சிறப்புடைய தேனும், நீலோற்பலம் அருமை வாய்ந்தது. நால்வகைப் பூக்களிலும் சிறந்தவை சிவபெருமானுக்குப் பெரிதும் உவப்பானவை என்று சொல்லப்படும்.

## 1. கோட்டுப் பூப் பலன்

6. கொன்றையின் பூவில் ஒன்றைக்
குளிர்மதி முடியோற் கேற்றின்
நன்றிசேர் சிவலோ கத்தில்
நண்ணுவர் அனந்த காலம்;

பொன்றிகழ் இரண்டை யேற்றப்
புகல்சாமீ பத்தில் வாழ்வார்;
ஒன்றிய சாரூபத்தில் ஒருமூன்றே;
நான்கே முத்தி. (1)

உரை. (இதுமுதல் இருபத்து நான்கு செய்யுளால் கோட்டுப் பூக்களின் பயன் கூறுகின்றார்.) கொன்றைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் சாலோக பதவியையும், இரண்டைச் சாத்தினவர்கள் சாமீப பதவியையும், மூன்றைச் சாத்தினவர்கள் சாரூப பதவியையும், நான்கைச் சாத்தினவர்கள் சாயுச்ச பர முத்தியையும் அடைவார்கள்.

7. செழுமலர்க் கொன்றைப் பூவைச்
சிவன்றனக் கேற்றி னோர்கள்
அழகமர் உருவ ராகி
அருளொடு பொருளும் ஆர்ந்தே
பழையவல் வினைகள் போக்கிப்
பத்திய ராகிப் பண்பார்
விழைசிவ லோகத் தின்கண்
மேவிமுன் முத்தி சேர்வார். (2)

உரை :- கொன்றைப் பூ வகைகளில் எந்த ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினாலும், இம்மையில் நல்லுடலும், செல்வமும் உடையராய்ப் பாவங்களின் நீங்கிச் சிவ பத்தி முதிரப் பெற்றுச் சிவபெருமானது திருவருளை அடைந்து, அம்மையில் சிவலோகத்தைப் பெற்று வாழ்ந்து, விரைவில் சாயுச்ச பரமுத்தியை அடைவர்.

## பவளக் கொன்றைப் பூ

8. பவளக்கொன் றைப்பூ ஒன்றைப்
பரமனுக் கேற்றி னோர்கள்
தவளக்கிம் புரிக்கோட் டானை
தனில்ஏறித் தருநி ழற்கே
துவரவாய் அரம்பை மாதர்
சூழவாழ்ந் தலகில் காலம்
குவளைக்கந் தரத்தன் ஊரில்
குலாவியே வதிவர் மாதோ. (3)

உரை :- கொன்றைகளில் பவளக் கொன்றையின் பூவைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் இந்திர லோகத்தில் ஐராவதத்தின்மேல் உலா வருதல், கற்பகக் காவில் அரம்பையர் சூழ்ந்து ஆடல் பாடல் செய்ய அமர்ந்திருத்தல் முதலிய இன்ப வாழ்வை நெடுங்காலம் பெற்றிருந்து, பின்னர்ச் சிவலோகத்தை அடைவர்.

குறிப்பு :- தவளம் - வெண்மை. கிம்புரி - யானையின் தந்தத்தில் கட்டும் பூண். கோடு - கொம்பு. துவர் - சிவப்பு; இஃது ஈற்றில் அகரச் சாரியை பெற்றது. குவளைக் கந்தரத்தன் - நீலோற்பலம் போன்ற கழுத்தை உடையவன்

## செண்பகப் பூ

9. செண்பக மலரில் ஒன்றைச்
சிவனடி சேரச் சாத்தின்
நண்புடைப் பெண்கள் போகம்
நாள்தொறும் புதிதாய் நண்ண

எண்புவி மீது மன்னர்
ஏறெனை இருந்து பின்னும்
விண்பயில் மகவா னாகி
மேவுவர் மேய போகம், (4)

உரை :- செண்பகப் பூ ஒன்றைச் சிவபெருமான் திருவடியில் சாத்தினால், மகளிர் இன்பத்தை நாள்தோறும் புதிது புதிதாகப் பெற்று, எண் திசைகளிலும் உள்ள மன்னர்களுக்குள்ளே தலையாய மன்னராய் வாழ்ந்து, பின்பு விண்ணவர் அரசனாகிய தேவேந்திரனாய், விரும்பிய இன்பங்களைப் பெறுவர்.

## புன்னைப் பூ

10. புன்னையின் பூவில் ஒன்றைப்
புனிதனுக் கேற்றி னோர்கள்
தன்னிகர் அழகு மேவிச்
சகமெலாம் தாமே ஆளும்
மன்னவ ராகி வாழ்ந்து,
மறுமையில் சிவலோ கத்தில்
துன்னி, ஆங் கிருந்து தானே
சுத்தமாம் முத்தி சேர்வார். (5)

உரை :- புன்னைப் பூ ஒன்றை இறைவனுக்குச் சாத்தின வர்கள் தமக்குத் தாமே நிகராகும் அழகுடையவர்களாய், உலகம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆண்டு, பின்பு சிவலோகத்தை அடைந்து வாழ்ந்து, அங்கிருந்தவாறே சாயுச்ச பரமுத்தியைப் பெறுவார்கள்.

இங்கிருந் தெண்ணில் போகம்
எய்தியே இமையோர் ஏத்தும்
செங்கண்மால் பதத்தில் சென்று,
சிவலோகம் சேர்ந்து வாழ்வார். (9)

உரை :- செங்கழுநீர்ப் பூ மந்தாரப் பூவிற்கு ஒப்பாகும். அந்தப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினோர், இம்மையில் அளவற்ற இன்பங்களைப் பெற்று, மறுமையில் தேவர்கள் துதிக்கின்ற வைகுந்த பதவியை அடைந்து வாழ்ந்து, பின் சிவலோக பதவியை அடைவார்கள்.

குறிப்பு :- செங்கழுநீர்பூ நீர்ப்பூவாயினும், கோட்டுப் பூவோடு ஒப்புமையுடைத்தாதல் பற்றி இங்குக் கூறினார் என்க.

## கிண்கிணி மந்தாரைப் பூ

15. கிண்கிணி மந்தா ரைப்பூக்
கொழுமியே சிவனுக் கேற்றில்
எண்கரு மங்க ளெல்லாம்
எளிதினில் எய்திப் பின்னர்
கண்களி கூர மேவாக்
கனலவன் பதம்அ டைந்தே
தண்கரு ணையராய் மேலாம்
சாலோகம் சார்ந்து வாழ்வார். (10)

உரை :- 'கிண்கிணி மந்தாரை' என்னும் பூவைச் சிவபெருமானுக்குச் சாத்தினால், நினைத்த காரியம் எளிதில் முடியப் பெற்று, மறுமையில் அக்கினி மண்டலத்தை அடைந்து, பின்பு சிவபெருமானது திருவருளைப் பெற்றுச் சிவலோகத்தில் சாலோக நிலையைப் பெறுவர்.

## பாரிசாதப் பூ

16. பாரிசா தப்பூ ஒன்றைப்
பரமனுக் கேற்றி ஞோர்கள்
சீரிய பொன்னு லோகம்
சேர்ந்தயி ராணி போகம்
ஆரவே திளைத்துப் பின்னர்
அயன் பதம் அணுகி வாழ்ந்தே
ஏருலாம் சிவலோ கத்தில்
இருப்பர்முக் கற்ப காலம். (11)

உரை :- பாரிசாத மலர் ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்திஞல், பொன்னுலகஆட்சியையும், இந்திராணிபோகத்தையும் உடைய இந்திர பதவியை அடைந்து, பின்பு பிரமலோகத்தையும் பெற்று, முடிவில் சிவலோகத்தை அடைவார்கள்.

## பன்னீர்ப் பூ

17. பன்னியின் பூவில் ஒன்றைப்
பரமனுக் கேற்றி ஞோர்கள்
தன்னிகர் காம லோகம்
சார்ந்துபோ கங்க ளெல்லாம்
மன்னிய உலகில் உள்ளோர்
மதிக்கமன் னவர்க ளாகிக்
கன்னிஓர் பாகன் கோயில்
காதலால் சேர்ந்து வாழ்வார். (12)

உரை :- பன்னீர்ப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், மன்மத லோகத்தை அடைந்து போகங்களை நுகர்ந்து, பின்பு மண்ணுலகத்தார் மதிக்குமாறு

மன்னராய்ப் பிறந்து வாழ்ந்து, முடிவில் சிவலோகத்தில் சேர்ந்து வாழ்வார்கள்.

## வெண் பாதிரிப் பூ

18. பாதிரி வெண்பூ ஒன்றைப்
பரமனுக் கேற்றி னோர்கள்
சோதிசேர் வடிவ ராகித்
தொல்லுல கெல்லாம் காத்து
மாதர்கள் சூழ வாழ்ந்தே
மறுமையில் மாதே வன்றன்
பாதபங் கயத்துச் சேர்ந்து
பரமானந் தத்தில் ஆழ்வார். (13)

உரை :- வெள்ளைப்பாதிரிப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், அழகிய உடம்புஉடையவராய்ப் பிறந்து உலகத்தை ஆண்டு, மகளிர் விரும்பிச் சூழ மகிழ்வுடன் வாழ்ந்து, மறுமையில் சிவபெருமானது திருவடி நிழலை அடைந்து சிவானந்தம் பெறுவர்.

## செம்பாதிரிப் பூ

19. சிவந்தபா திரிப்பூ ஒன்றைச்
சிவன்றனக் கேற்றி னோர்கள்
பவந்தொலைந் தும்பர் கோவாய்ப்
பலபோகம் துய்த்துப் பின்னர்
உவந்திடும் அயன்ப தத்தில்
ஒருகற்பம் இருந்து மால்பால்
நிவந்திடுங் கணங்க ளாகி
நிலவுவர் சிவலோ கத்தில். (14)

உரை :- சிவப்புப் பாதிரிப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், பாவங்கள் நீங்கப்பெற்று, தேவேந்திரனாகிப் பல போகங்களை நுகர்ந்து, பின்பு ஒரு கற்ப காலம் பிரம லோகத்தில் வாழ்ந்து, பின்னர் வைகுந்தத்தில் திருமாலின் பரிவாரங்களாய் இருந்து, முடிவில் சிவலோகத்தை அடைந்து வாழ்ந்திருப்பர்.

## குராப் பூ

20. குரவம்பூ ஒன்றைச் செவ்வேல்
குமரனுக் கேற்றி னோர்கள்
மரவம்செஞ் சாந்து பூசும்
மணிமுலை மாதர் சூழ
இரவும்பல் பகலும் இன்பம்
இசைந்துவேள் பதத்தில் எய்தி
அரவம்பூண் டோன்சா ரூபம்
அனுதினம் அணுகி வாழ்வார். (15)

உரை :- குரா மரத்தின் பூ ஒன்றை முருகக் கடவுளுக்குச் சாத்தினோர், குங்குமப் பூச் சேர்ந்த செஞ் சாந்து பூசிய அழகிய தனங்களையுடைய மாதர்கள் சூழ்ந்திருக்க, இரவும் பகலும் அவர்களது இன்பத்தில் திளைத்து, மன்மத லோகத்தை எய்தி வாழ்ந்து, முடிவில் சிவ சாரூபத்தை அடைவர்.

குறிப்பு :- "குரா மலரோடு அரா மதியம் சடைமேற் கொண்டார்" என்னும் திருத்தாண்டகத்தால், குரா மலர் சிவபெருமானுக்கும் உரியதாதல் விளங்குதலால், அதனை முருகப்பெருமானுக்குச் சாத்துதலை இங்குக்கூறியது, அஃது அவருக்குச் சிறப்பாதல் பற்றி என்க. செந்நழம் பூவிற்கும் இவ்வாறே கொள்க.

## கோங்கம் பூ

21\. கோங்கம்பூ ஒன்றை நம்பன்
குளிர்மலர்த் தாளில் சாத்தின்
ஓங்குசெல் வங்க ளெல்லாம்
உவந்தனு பவித்தே, யாரும்
வாங்குந்தன் மையரா ஈந்தே
வண்புக ழாள ராகிப்
பாங்கம்பொன் னுலகிற் கோவாய்ப்
பாவையர் சூழ வாழ்வார். (16)

உரை :- கோங்கம் பூ ஒன்றைச் சிவபெருமானது திருவடிகளில் சாத்தினால், உலகத்தில் எல்லா வகையான செல்வங்களையும் பெற்று அவற்றை அனுபவித்து, பலரும் தாம் கொடுக்க வாங்கும் கையை உடையவர்கள் ஆக அவர்களுக்குக் கொடுத்து, அதனால் பெரும் புகழைப் பெற்று, அழகிய பொன்னுலகிற்கு அரசராய்த் தேவ மாதர் சூழ இன்புற்று வாழ்வார்கள்.

குறிப்பு :- பாங்கு - இன்பம். அம் - அழகு.

## தாழம் பூ

22\. கேதகை பூவில் ஈசன்
கிளர்முடி கண்டேன் என்ற
வேதனுக் காகப் பொய்யை
விளம்புத லாலே என்றும்
நாதனுக் காகா(து); எங்கள்
நாயகி முதலா யார்க்கும்
போதமுற் றணிந்தார் போதன்
புரத்தினில் பொருந்தி வாழ்வார். (17)

உரை :- பூக்களில் தாழம் பூ, 'சிவபெருமானது முடியை நான் கண்டுவிட்டேன்' என்று திருமாலிடம் பொய் கூறிய பிரமனுக்காகப் பொய்ச் சான்று பகர்ந்தமை பற்றிச் சிவ பெருமான், 'நமக்கு நீ ஆகாய்' என்று விலக்கினமையால், அவருக்கு அஃது ஆகாது. ஆ'பினும், உமாதேவி முதலி யோர்க்கு ஆகும். அவர்கட்கு அதனைச் சாத்தினவர்கள் பிரம லோகத்தை அடைந்து வாழ்வார்கள்.

குறிப்பு :- தாழை புதற் பூவாயினும், இவ்வாசிரியர் கோட்டுப் பூவில் சேர்த்துள்ளார்.

### செந்தாழம் பூ

**23.** செந்தாழம் பூவைக் கந்தன்
திருமுடிக் கேற்றி னோர்கள்
கொந்தாருங் குழலார் சூழக்
குலவிய போகம் ஆர்ந்தே
நந்தாருங் கரத்து மாயன்
நல்லுல கதனில் நண்ணிச்
செந்தார் தாங் கியபுயத்துச் செவ்வேள்பால்
சேர்ந்து வாழ்வார். (18)

உரை :- செந்தாழம் பூவை முருகப்பெருமானது திரு முடியில் அணிவித்தோர், இம்மையில் மகளிர் விரும்பிச் சூழ இன்பம் துய்த்து, மறுமையில் மாயோன் உலகத்தை அடைந்து வாழ்ந்து, பின்பு கந்தலோகத்தை அடைவார்கள்.

குறிப்பு :- நந்து - சங்கு. செந்தார் - வெட்சி மாலை.

### ஆத்திப் பூ

**24.** ஆத்தியின் இலைபூ ஒன்றை
அரன் இணை யடியில் சாத்தின்
பூத்திகழ் கற்ப கத்தின்
பொன்மர நிழலில் எய்திச்

சீர்த்திஆர் போகம் ஆர்ந்தே
சிவலோகம் சேர்ந்து ஞானம்
நீர்த்திகழ் சடில னாலே
நிலவிடப் பெற்று வாழ்வார். (19)

உரை :- ஆத்தியின் இலையையாயினும், பூவையாயினும் சிவபெருமானது திருவடியில் சாத்தினால், பூக்கள் நிறைந்த பொன் மயமான கற்பக தருக்களின் நிழலைச் சேர்ந்து புகழ் மிக்க போகங்களை நுகர்ந்து, பின்பு சிவலோகத்தை அடைந்து, சிவபெருமானது திருவருளால் ஞானத்தைப் பெற்று வாழ்வார்கள்,

குறிப்பு :- " *நீர்த்திகழ்* " என்பதில் தகரவொற்று விரித்தல்.

## கொன்றுத்திப் பூ

25. கொன்றுத்திப் பூவை ஈசன்
குளிர்பத மலரில் சாத்தின்
கன்றுப்போல் அன்பு மேவிக்
காமன தாணை தன்னை
வென்றோர்க்கும் மேலாய் நல்ல
விரத்தியாய்ப் பாவ மெல்லாம்
கொன்றுத்தி முத்தி கூடிக்
குலவுபே ரின்பம் ஆர்வார். (20)

உரை :- கொன்றைப் பூப்போல உள்ளமையால் 'கொன்றுத்தி' என வழங்கப்படுகின்ற பூவைச் சிவபெருமானது திருவடியில் சாத்தினால், அப் பெருமானிடத்தில் கன்றினை ஈன்ற பசுவைப்போல அன்புமிகப்பெற்று, மன்மதனது ஆற்றலை வென்ற முனிவர்கட்கும் மேலாக அவா

அற்றவர்களாய்ப் பாவங்களை யெல்லாம் தொலைத்து, முடி வான முத்தியைப் பெறுவார்கள்.

குறிப்பு :- 'ஆத்தி முத்தி' என்பதில் ஆத்தி - (ஆப்தி) முடிவு.

## மஞ்சள் ஆத்திப் பூ

26. மஞ்சள்ஆத் திப்பூ ஒன்றை
மதிமுடி யோற்குச் சாத்தின்
அஞ்சொலார் அரம்பை மாதர்
அளவிலாப் போகம் ஆர்ந்தே
கஞ்சம்ஆர் பிரம ஞகிக்
கற்பம்ஒன் றற்கு மாலாய்
எஞ்சலில் போகம் ஆர்ந்தே
ஈசன துருவம் ஆவார். (21)

உரை :- மஞ்சள் நிறமான ஆத்திப் பூ ஒன்றைச் சிவ பெருமானுக்குச் சாத்தினுல், அழகிய சொற்களை யுடைய தேவ மாதர்களது அளவிலா இன்பத்தைத் துய்த்து, தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமஞகிப் பின்பு, ஒரு கற்பகாலம் திருமாலாகி இன்புற்று, பின்னர்ச் சிவபெரு மானது சாரூபத்தைப் பெறுவர்.

குறிப்பு :- 'இங்கு மஞ்சள் ஆத்தி' என்றமையால், 'கொன்றை ஆத்தி' என்பது வடிவால் கொன்றைபோல்வ தாதல் பெறப்படும்.

## வாகைப் பூ

27. பெருவாகைப் பூவை ஆடி
பிறங்கிய பருவந் தன்னில்
உருவாரும் பரனுக் கேற்றில்
உத்தியோ கித்த தெல்லாம்

திருவார வெற்றி யாகும் ;
செய்தபா வங்கள் நீங்கும் ;
ஒருவாநற் சிவலோ கத்தில்
உறைந்தின்பம் உறலா மன்றே. (22)

உரை :- வாகைப்பூவை ஆடிமாதப் பௌர்ணமியில் சிவபெருமானுக்குச் சாத்தினுல், எடுத்துமுயன்ற காரியங்கள் யாவும் வெற்றியாய் முடியும். செய்த பாவங்களும் நீங்கும். பின்பு, நீங்குதல் இன்றிச் சிவலோகத்தை எய்தித் தூய இன்பத்தையும் பெறலாம்.

குறிப்பு :- உத்தியோகம் - முயற்சி. உத்தியோகித்தல் - முயற்சி செய்தல்.

குருக்கத்திப் பூ

28. குருக்கத்திக் கொழுந்தும் பூவும்
குலவுகே தார நாதர்க்
குருக்கத்தால் இருபத் தோர்நாள்
உவந்தருச் சனைபு ரிந்தோர்
பெருக்கத்தால் உலகை ஆண்டு,
பின்புசா ரூபம் சார்ந்தே
திருக்கெலாம் தவிர்ந்து முத்தி
சேர்ந்துபே ரின்பம் ஆர்வார். (23)

உரை :- குருக்கத்தியின் தளிரையாயினும், பூவையாயினும் கேதார நாதர்க்கு மிகுந்த அன்போடு இருபத்தொரு நாள் தொடர்ந்து அருச்சனை செய்தால், அரச செல்வத்தைப் பெற்று உலகை ஆண்டு, பின்பு சாரூப பதவியில் வாழ்ந்து, முடிவில் பாசங்கள் நீங்கிப் பரமுத்தியை அடைந்து பேரின்பத்தில் திளைப்பார்கள்.

குறிப்பு :- இதுவும் கேதார நாதர்க்குச் சிறப்பாதல் பற்றிக் கூறப்பட்டது. குருக்கத்திக் கொடியாயினும், மரக் கிளைகளைப் பற்றி உயரத்தில் சென்று படர்ந்து பூத்தல் அன்றித் தனியே நிலத்தில் படர்ந்து பூவாமையால், கோட்டுப் பூக்களுள் ஒன்ருகக் கூறினர்.

### செருந்திப் பூ

29. செருந்தியின் பூவில் ஒன்றைச்
சிவன்றனக் கேற்றி ஞேர்கள்
புரிந்தகா ரியங்க ளெல்லாம்
பொலிவுடன் பொருந்த வாழ்ந்தே
யிருந்துபின் தேகாந் தத்தில்
இந்திர விமானம் ஏறி
விரிந்தபொன் னுலகின் மேவி
மிக்கபோ கங்கள் ஆர்வார். (24)

உரை :- செருந்திப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், விரும்பிச் செய்யும் காரியங்கள் யாவும் அவர்கள் விரும்பியவாறே முற்றுப்பெறப் பெருமையுடன் வாழ்ந்து, உடம்பு நீங்குங் காலத்தில் இந்திர விமானத்தில் ஏறிச் சென்று இந்திர லோகத்தை அடைந்து, இன்பங்களை மிகவும் நுகர்ந்து வாழ்வார்கள்.

## 2. கொடிப் பூப் பயன்

### தாளிப் பூ

30. தாளியின் பூவில் ஒன்றைச்
சம்புவின் பதத்தில் சாத்தின்
நீளுல கெல்லாம் காத்து
நிலவுபோ கங்கள் துய்த்தே

வாளைநேர் விழியின் மாதர்
வாஞ்சிக்கும் வடிவ ராகிக்
கோளகல் சிவலோ கத்தில்
குலவிவீற் றிருப்பார் தாமே. (1)

உரை :- ( இது முதல் பத்துச் செய்யுட்களால் கொடிப் பூக்களின் பயன் கூறுகின்றார். ) தாளிப் பூ ஒன்றைச் சிவ பெருமானது திருவடியில் சாத்தினால், உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு, இவ்வுலகில் உள்ள எல்லா இன்பங்களையும் நுகர்ந்து, வாள்போன்ற கண்களையுடைய மாதர்கள் விரும்பத்தக்க வடிவழகைப் பெற்றுத் தீங்கில்லாதது தாகிய சிவலோகத்தில் சென்று வீற்றிருப்பார்கள்.

## முல்லைப் பூ

31. முல்லையின் பூவில் ஒன்றை
முக்கணற் கேற்றி னோர்கள்
மெல்லிய லார்கள் சூழ
வேள்பதம் மேவி மேலாம்
நல்லபோ கங்கள் நண்ணி
நாடெலாம் மதிக்க வாழ்ந்தே
எல்லை யிலாத மாதர்
இணைமுலை அணைகு வாரே. (2)

உரை :- முல்லைப் பூ ஒன்றை, மூன்று கண்களையுடைய சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், அரம்பையர் சூழ மன்மத லோகத்தை அடைந்து அங்குள்ள சிறந்த போகங்களைத் துய்த்துப் பின்னும் நாடெலாம் மதிக்க இவ்வுலகில் பிறந்து மகளிர் இன்பத்தை மிகப் பெற்று வாழ்வார்கள்.

## மல்லிகைப் பூ

32\. கொடிமல்லி கைப்பூ ஒன்றைக்
குழகனுக் கேற்றி ஞேர்கள்
வடிவமார் மாத ரெல்லாம்
வாஞ்சிக்கும் வடிவ ராகி
நெடிதுகா லங்க ளெல்லாம்
நேசமார் போக மார்ந்தே
கடிமலர்க் கற்ப கத்தின்
காவில்வீற் றிருப்பர் தாமே. (3)

உரை: கொடிமல்லிகைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், அழகுடைய மாதர்கள் விரும்பத்தக்க பேரழகுடையவர்களாய் நீண்டகாலம் அவர்களது இன்பத்தைத் துய்த்துப்பின் இந்திர லோகத்தில் சென்று, கற்பகச் சோலையில் இன்பமுற்றிருப்பார்கள்.

## அடுக்கு மல்லிகைப் பூ

33\. அடுக்குமல் லிகைப்பூ ஒன்றை
அமலனுக் கேற்றி ஞேர்கள்
விடுக்கரும் பாவ மெல்லாம்
விட்டுவே ளினது ரூபம்
கடுக்கும்நல் வடிவ ராகிக்
காசினி முழுதும் காத்துக்
கொடுக்கவேண் டியதெல் லாமும்
கொடுத்தயன் பதத்தில் சேர்வார். (4)

உரை :- அடுக்கு மல்லிகைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் நீக்குதற்கரிய பாவங்களெல்லாம் நீங்கப்பெற்று, மன்மதனது வடிவம் போன்ற அழகிய வடிவத்தை உடையவர்களாய், உலகம் முழுவதையும் ஆட்சி செய்து, வேண்டுவார்க்கு வேண்டும் பொருள்களைக் கொடுத்து மிக்க புகழைப் பெற்றுப் பின் பிரம லோகத்தை அடைவார்கள்.

## அனங்க மல்லிகைப் பூ

34. அனங்கமல் லிகைப்பூ ஒன்றை
அரன்றனக் கேற்றி னோர்கள்
மனங்கவர் போகம் யாவும்
மருவியே வைய மெல்லாம்
இனங்களோ டினிது சாந்தே
யிருந்துபின் இரதம் ஏறிக்
கனங்குழை மடவார் சூழக்
காமவேள் பதத்தில் சேர்வார். (5)

உரை :- அனங்க மல்லிகைப் பூ ஒன்றைச் சிவபெருபெருமானுக்குச் சாத்தினவர்கள், மனத்துக்கு இனிய போகங்கள் எல்லாவற்றையும் அடைந்து, உலகம் முழுவதையும் அமைச்சர் முதலிய அரசச் சுற்றத்தவருடன் கூடிப் புரந்திருந்து, பின் விமானத்தில் ஏறிச் சென்று மகளிர் சூழ மன்மத லோகத்தை அடைவார்கள்.

## குடமல்லிகைப் பூ

35. குடமல்லி கைப்பூ ஒன்றைக்
கோலமால் விடையாற் கேற்றின்
இடமல்கு வைய மெல்லாம்
இனிதினில் ஆண்டு, வேண்டும்

திடமல்கு போக மெல்லாம்
திளைத்துவேள் பதத்தில் எய்தி
அடல்மல்கு திருமா லாகி
அரன்பதி யடைந்து வாழ்வார். (6)

உரை ;- குடமல்லிகைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினோர், உலகம் முழுவதையும் இனிதே ஆட்சி செய்து, விரும்பிய போகத்தை யெல்லாம் நுகர்ந்து, மன்மத லோகத்தை அடைந்து வாழ்ந்து, பின் திருமாலின் உலகத்தை அடைந்து வாழ்வார்கள்.

## இருவாட்சிப் பூ

36. இருவாட்சிப் பூவில் ஒன்றை
ஈசனுக் கேற்றி னோர்கள்
கருவாட்சி யாகும் சென்மக்
கடலினைக் கடந்து ஞான
குருவாற்பெற் றுலகுக் கெல்லாம்
குருவாகி எவர்க்கும் இன்ப
உருவாகித் தாமும் முத்தி
உறுவர்எல் லோரும் உய்ய. (7)

உரை :- இருவாட்சிப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், ஞான குருவால் ஞானத்தைப் பெற்று பின் தாமும் குருவாகி, யாவர்க்கும் பேரின்பத்தைத் தருகின்ற அருட்டிரு மேனியை உடையவராய் உலகம் உய்ய வாழ்ந்து, பின்பு கருக் குழியில் வீழ்வதாகிய பிறவிக் கடலைக் கடந்து, முத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- நள்ளிரவில் பூத்து மணம் வீசுதலால் ‘இருள் வாசி’ எனப் பெயர் பெற்ற பூவின் பெயர் ‘இருவாட்சி’ என மருவி வழங்குகின்றது. இதனைச் சங்க

இலக்கியத்துள் † 'நள்ளிருள் நாறி' எனக் கூறியிருத்தல் காணலாம்.

## சங்கவர்த்தனப் பூ

37. சங்கவர்த் தனத்தின் பூவைச்
சங்கரிக் கேற்றி ஞேர்கள்
குங்குமக் கொங்கை மாதர்
குழுமியே சூழ வாழ்ந்தே
அங்கவர் போக மெல்லாம்
ஆர்ந்தபின் அனங்க ஞகி
மங்கலில் போகம் துய்த்து
மருவுவர் சிவலோ கத்தில். (8)

உரை :- சங்க வர்த்தனப் பூவை (சங்குப் பூவை) உமா தேவிக்குச் சாத்தினவர்கள் குங்குமக் குழம்பு பூசப் பெற்ற தனங்களையுடைய மாதர்கள் குழாமாகிச் சூழ்ந்திருக்க வாழ்ந்து, அவர்களது இன்பங்களையெல்லாம் ஆரத்துய்த்த பின்னர் மன்மத பதவியைப் பெற்று அந்தப் போகத்தை நுகர்ந்தபின் சிவலோகத்தை அடைவார்கள்.

## பிச்சிப் பூ

38. பிச்சியின் பூவில் ஒன்றைப்
பிறைமுடி யோற்குச் சாத்தின்
நிச்சய மாக வேதா
நீள்பதம் மேவி எல்லாம்

† குறிஞ்சிப் பாட்டு - 94.

இச்சையின் படியே பெற்றங்
கிருந்துமால் பதம்இ சைந்தே
நச்சிய எல்லாம் சேர்ந்து
நவில்சிவ லோகம் தேர்வார். (9)

உரை :- பிச்சிப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினோர், பிரம லோகத்தை அடைந்து அங்குள்ள போகங்களை வேண்டியவாறெல்லாம் நுகர்தல் திண்ணம். அவ்வாறு நுகர்ந்தபின் மாயோனது உலகத்தை அடைந்து விரும்பியவற்றை அறிந்து பெற்று வாழ்ந்து, முடிவில் சிவலோகத்தை அடைவார்கள்.

குறிப்பு : வேதா - பிரமன்.

## வல்லி சாதப் பூ

39. வல்லிசா தப்பூ ஒன்றை
மாதுமை யாளுக் கேற்றின்
நல்லரு பத்தி னோடு
நாரியர் போகம் நண்ணி
வல்லவா றனுப வித்தே
மன்மதன் பதத்தில் மன்னி
எல்லைஇல் போக மெல்லாம்
இசைந்துமை பதத்தி ருப்பார். (10)

உரை :- வல்லி சாதப் பூ ஒன்றை உமாதேவிக்குச் சாத்தினால், வடிவழகைப் பெறுதலோடு, மகளிர் இன்பமும் வாய்க்கப் பெற்று நுகர்ந்து பின்பு மன்மத லோக போகத்தையும் மிகப் பெற்று, அப்பால் தேவியின் உலகத்தில் சேர்ந்து வாழ்வார்கள்.

# 3. நீர்ப்பூப் பயன்

## செந்தாமரைப் பூ, வெண்டாமரைப் பூ

40. சிவந்ததா மரைப்பூ ஒன்றைச்
சிவனடிச் சேரச் சாத்தின்
பவந்தவிர் பிரம கற்பம்
பகர்சிவ லோகம் சேர்வார் ;
நிவந்தவெண் டாமரைப்பூ நீகமொன்றால்
அருச்சித் தோர்கள்
தவந்தரும் சாமீ பத்தில்
சார்ந்துவாழ்ந் திருப்பர் தாமே, (1)

உரை :- ( இது முதல் எட்டுச் செய்யுட்களால் நீர்ப் பூக்களின் பயன் கூறுகின்றார். )

செந்தாமரைப் பூ ஒன்றைச் சிவபெருமானது திருவடியில் பொருந்தச் சாத்தினால் ஒரு பிரம கற்பம் சிவலோகத்தில் வாழ்வார்கள். வெண்டாமரைப் பூ ஒன்றால் அருச்சனை செய்தவர்கள் சாமீப பதவியைப் பெறுவார்கள்.

## ஆயிரந் தாமரைப் பூ, அருச்சனைப் பயன்

41. ஆயிரந் தாமரைப்பூ ஆயிர
நாமஞ் சாற்றித்
தூயநா தற்க ணிந்தோர்
துலங்குசா ரூபம் கற்பம்
ஆயகா லங்கள் சேர்வார் ;
அமர்ந்தவெண் கமல மாதின்
மேயசா யுச்சி யந்தான்
மேவியே யின்பம் ஆர்வார். (2)

உரை :- ஆயிரந் தாமரைப் பூக்களை ஆயிரம் பெயர் கூறிச் சிவபெருமானை அருச்சித்தவர்கள், கற்பகாலம் சாருப பதவியில் வாழ்வர். (மகளிராயின்,) நாமகளது சாயுச் சத்தைப் பெற்று நலம் பெறுவார்கள்.

## செங்குவளைப் பூ

42. செங்குவ ளைப்பூ ஒன்றைச்
சிவன்றனக் கேற்றி னோர்கள்
மங்கல உருவ ராகி
மங்கையர் சூழ நாளும்
தங்கிய போக மெல்லாம்
சார்ந்தொரு கற்ப காலம்
துங்கமார் சாரு பத்தில்
துலங்கியே யிருந்து வாழ்வார். (3)

உரை : செங்குவளைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், அழகிய உருவத்தைப் பெற்று மங்கையர் புடைசூழ இன்பத்தோடு வாழ்ந்து, சாருப பதவியில் ஒரு கற்ப காலம் வாழ்வார்கள்.

## கருங்குவளைப் பூ

43. கருங்குவ ளைப்பூ ஒன்றைக்
கறைக்கண்டற் கேற்றி னோர்கள்
நெருங்குதம் கிளைக ளோடு
நேயமாம் போகம் ஆர்ந்தே
யிருந்தயி ராவ தத்தில்
ஏறியே மகவா னாகிப்
பெருங்கயி லாயத் திற்போய்ப்
பிரிவில்சா ரூபம் சேர்வார். (4)

உரை :- கருங்குவளைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், நெருங்கிய சுற்றங்களை உடையவர்களாய் அவர்களோடு அளவளாவிச் சிறப்புற வாழ்ந்து, பின்பு ஐராவதத்தில் உலா வருகின்ற இந்திரனாய் வீற்றிருந்து, அதன்பின் மகாகயிலாயத்தில் சென்று சிவ சாரூபம் பெற்று வாழ்வார்கள்.

## நெய்தற் பூ

44. நெய்தலின் பூவில் ஒன்றை
நிமலனுக் கேற்றி னோர்கள்
மெய்திகழ் சாலோ கத்தின்
மேவிஆங் கிருந்து தானே
செய்திஆர் ஞானம் மேவிச்
சிவசாரு பத்தில் சேர்ந்தே
நொய்தினில் இன்பம் ஆர்ந்து
நுவலரு முத்தி சேர்வார். (5)

உரை :- நெய்தற் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் சிவலோகத்தில் முன்னர்ச் சாலோக நிலையையும், பின்னர்ச் சாரூப நிலையையும் பெற்றுப் பின்பு அவ்விடத்திற்றானே ஞானத்தை அடைந்து, விரைவில் சொல்லுதற்கரிய சாயுச்ச முத்தியை அடைவார்கள்.

## செங்குவளை மாலையின் பயன்

45. சிவந்தஉற் பலத்தி னாலே
சிறப்புடன் ஆயி ரம்பூ
நிவந்திரு மாலை ஒன்றை
நிறக்கவே செய்து நம்பன்

உவந்திடச் சாத்தி னோர்கள்
உலகெலாம் புரந்து பின்னர்ப்
பவந்தொலைத் தின்பம் எய்திப்
பரமமாம் முத்தி சேர்வார். (6)

உரை :- செங்குவளைப் பூ ஆயிரம் கொண்டு அவற்றால் மாலை ஒன்றை அழகுபெறத் தொடுத்துச் சிவபெருமானுக்கு மகிழ்ச்சி உண்டாகச் சாத்தினவர்கள், உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு, பின்னர்ப் பிறவியை அறுத்துப் பரமுத்தியை அடைவார்கள்.

## கருங்குவளை மாலையின் பயன்

46. நீலஉற் பலத்தி னாலே
நிறுவஆ யிரப்பூச் சேர்த்துக்
கோலமா மாலை ஒன்று
குயிற்றியே சிவனுக் கேற்றின்
சாலவும் போகம் துய்த்துச்
சாரூபம் சார்ந்து பின்னர்க்
காலகன் மங்க டந்து
கருதரு முத்தி சேர்வார். (7)

உரை :- கருங்குவளைப் பூ ஆயிரம் கொண்டு அவற்றால் அழகிய மாலை ஒன்றைத் தொகுத்துச் சிவபெருமானுக்குச் சாத்தினால், உலகில் எல்லா இன்பங்களையும் மிக நுகர்ந்து பின்னர்ச் சாரூபத்தை அடைந்து, காலாந்தரத்தில், நினைத்தற்கரிய முத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- குயிற்றுதல் - செய்தல்.

### நெய்தற் பூ மாலையின் பயன்

47. ஆயிர நெய்தற் பூவை
    ஆயிரந் தாம மாக்கி
ஆயிர நாமத் தாலே
    அரன்றனை அருச்சித் தோர்கள்
ஆயிரங் கற்ப காலம்
    அணிகொள் சாரூபம் எய்தி
ஆயிர மறையி னாலும்
    அளப்பரு முத்தி சேர்வார். (8)

உரை :- ஆயிர நெய்தற் பூ ஒரு மாலையாக, அவ்வாறு ஆயிர மாலைகள் தொடுத்துச் சிவபெருமானது ஆயிரம் பெயர்களைச் சொல்லி அருச்சனை செய்தவர்கள், ஆயிரங் கற்பம் சாரூபத்தில் வாழ்ந்து, பின்னர் ஆயிரம் வேதங் களாலும் அளந்து சொல்லுதற்கரிய முத்தியை அடை வார்கள்.

## 4. நிலப் பூப் பயன்

### தும்பைப் பூ

48. தும்பையின் பூவில் ஒன்றைத்
    தோகைஓர் பாகற் கேற்றின்
அம்புயன் பதத்தின் மேவி
    ஆயிரங் கற்பம் வாழ்ந்தே
செம்பது மக்க ளுஞ்சேர்
    சீருல கடைந்து பின்னர்ச்
சம்புவின் பதத்தில் மேவிச்
    சாயுச்சி யத்தைச் சேர்வார். (1)

உரை :- (இது முதல் இருபத்தாறு செய்யுட்களால் நிலப் பூ வகை கூறுகின்ருர். )

தும்பைப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினல், ஆயிர கற்ப காலம் பிரம லோகத்தில் வாழ்ந்து, பின்பு, திருமாலினுடைய வைகுந்தத்தை அடைந்திருந்து, அதன் பின் சிவலோகத்தில் சென்று சாயுச்சத்தை அடைவார்கள்.

## புலிநகக் கொன்றைப் பூ

49 ஞாழலின் பூவில் ஒன்றை
நம்பனுக் கேற்றி ஞேர்கள்
கேழலின் வடிவு கொண்டோன்
கிளர்உல கடைந்து வாழ்ந்தே
காழிலங் கியநற் கண்டன்
கருதுல குற்று ஞானச்
சூழல்அங் கேஅ டைந்து
சொல்லொணு முத்தி சேர்வார். (2)

உரை :- புலிநகக் கொன்றைப் பூ ஒன்றைச் சிவ பெருமானுக்குச் சாத்தினவர்கள், வராக வடிவங்கொண்டு பூமியைத் தாங்கினவனாகிய திருமால் உலகத்தை அடைந்து வாழ்ந்து, நீல கண்டத்தை யுடைய சிவபெருமானது உலகத்தில் சேர்ந்து அங்கேயே ஞானத்தைப் பெற்றுச் சொல்லுதற்கரிய பரமுத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- புலி நகக் கொன்றையை, 'கிளி மூக்குக் கொன்றை' என்றும் கூறுவர். கேழல் - பன்றி. காழ் - கறுப்பு நிறம்.

## வெட்சிப் பூ

50. மேலான வெட்சிப் பூவை
விமலனுக் கேற்றி னோர்கள்
வேலோன்றன் பதத்தில் மேவி
வேண்டிய எல்லாம் தந்தே
நூலாரும் மலர்மா தூர
நுவலரும் பண்கள் பாடக்
கோலா கலம்பொ ருந்திக்
குவலய மன்ன ராவார். (3)

உரை :- வெட்சிப் பூவைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், கந்த லோகத்தை அடைந்து வாழ்ந்து, பின்பு கலைமகளும் கேட்டு மகிழ்ச்சி மிகும்படி, சொல்லுதற்கரிய இசைகளைப் பலர் வந்து பாட அவர்கட்கு வேண்டிய பரிசுகளைக் கொடுத்து ஆரவாரத்துடன் வாழ்கின்ற மண்ணுலக அரசராய்ப் பிறந்து வாழ்வார்கள்.

குறிப்பு :- நூல் ஆரும் மலர் மாது - கல்விக்கு உரிய, தாமரை மலர்மேல் வாழ்கின்ற தேவி. அவள் வீணையால் இசையைச் சிறக்கப் பாடுபவள் ஆதலின், 'அவளும் மகிழ்ச்சி மீதூர' என்றார்.

## கொக்கு மந்தாரைப் பூ

51. கொக்கித ழின்மந் தாரைக்
குளிர்மல ரதனில் ஒன்றை
அக்கர வசைத்த நம்பன்
அடியிணை யதனிற் சாத்தின்

மிக்கபா வங்கள் நீங்கி
    வேண்டிய எல்லாம் எய்தித்
தக்கசா ரூபம் கற்பம்
    சார்ந்துபின் சார்வர் முத்தி. (4)

உரை: கொக்கு மந்தாரைப் பூ ஒன்றைச் சிவபெருமானுடைய திருவடிகளில் சாத்தினால், பெரிய பாவங்களும் நீங்கப் பெற்று, நினைத்தவை யாவும் முற்றுப் பெற, ஒரு கற்ப காலம் சிவசாரூப பதவியில் இருந்து, பின்பு முத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- அக்கு அரவு அசைத்த - எலும்பையும், பாம்பையும் அணிந்துள்ள. அசைத்தல் - கட்டுதல்.

## மாதுளை இலை முதலியவற்றின் பயன்

52. மாதுளை இலைகொ ழுந்து
    மலர்கள்காய் இவற்றை அன்பால்
மாதொரு பாகற் கேற்றி
    மருவவே சாத்தி னோர்கள்
ஆதவன் பதத்தில் மேவி
    ஆயிரம் கற்பம் ஆர்ந்தே
சீதரன் பதத்தில் எய்திச்
    சிவபோகம் சார்ந்து வாழ்வார். (5)

உரை :- மாதுளையினது இலை, கொழுந்து, மலர் என்பவற்றுள் எந்த ஒன்றை அன்புடன் சிவபெருமானுக்குச் சாத்தினவர்களும், சூரிய மண்டலத்தில் ஆயிரங் கற்ப காலம் வாழ்ந்து, பின்பு திருமாலின் உலகத்தை அடைந்திருந்து, பின்பு சிவலோகத்தை அடைவார்கள்.

## பட்டு அலரிப் பூ

53. பட்டல ரிப்பூ ஒன்றைப்
பரமனுக் கேற்றி னோர்கள்
இட்டமார் போக மெல்லாம்
இசைந்துமன் னவர்க ளாகி
அட்டதிக் கோரும் போற்ற
அவனியெல் லாம்பு ரந்தே
மட்டலர் குழலார் சூழ
வாசவ னாகி வாழ்வார். (6)

உரை :- பட்டு அலரிப் பூ ஒன்றைப் பரமசிவனுக்குச் சாத்தினவர்கள், விரும்பிய போகங்களை எல்லாம் அனுபவித்து, பின்பு அரசராய்ப் பிறந்து எட்டுத் திக்கில் உள்ளவர்களும் புகழ்ந்து போற்றும்படி உலகம் முழுவதையும் ஆண்டு, மகளிர் சூழ இந்திரராகி வாழ்வார்கள்.

குறிப்பு :- மட்டு அலர் குழல் - வாசனையுடன் விரிகின்ற கூந்தல்.

## செவ்வலரிப் பூ

54. அலரியின் செம்பூ ஒன்றை
அரன்றனக் கேற்றி னோர்கள்
பலவித போகம் ஆர்ந்து
பார்முழு தாண்டு பின்னர்ச்
சலசநா யகன் பதத்தில்
சார்ந்துபின் சிவலோ கத்தில்
நில்விஆங் கிருந்து தானே
நீடுவர் பரம முத்தி. (7)

உரை - அலரியில் சிவப்பு நிறம் உடைய பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், பலவித போகங்களை நுகர்ந்து, உலகம் முழுவதையும் ஆண்டு, பின்னர்ச் சூரிய மண்டலத்தை அடைந்து வாழ்ந்து, பின்பு சிவலோகத்தில் சிறப்புற்றிருந்து, அங்கிருந்தேபரமுத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- சலசம் - தாமரை. அதற்கு நாயகன் சூரியன்.

## அடுக்கு அலரிப் பூ

55. அடுக்கல ரிப்பூ ஒன்றை
அரன்றனக் கேற்றி னோர்கள்
மிடுக்குடை மன்ன ராகி
வேண்டிய தாண்டு பின்னர்
நடுக்கமில் மகவா னாகி
நான்முகன் பதத்தில் மேவி
இடுக்கண்இல் சிவலோ கத்தில்
இசைந்தின்பம் எய்து வாரே. (8)

உரை : அடுக்கு அலரிப் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் கம்பீரம் பொருந்திய அரசர்களாகி விரும்பிய நாடுகளை யெல்லாம் ஆண்டு, பின்பு இந்திரனாகி யிருந்து, பின்பு பிரம லோகத்தில் வாழ்ந்து, முடிவில் சிவலோகத்தை அடைந்து இன்புறுவார்கள்.

## வெள்ளை அடுக்கு அலரிப் பூ

56. வெள்ளடுக் கலரிப் பூவை
விமலனுக் கேற்றி னோர்கள்
அள்ளல்ஆர் கலிசு லாவும்
அவனிமன் னவர்க ளாகிக்

கள்ளவாள் விழியார் மாதர்
காதலால் சூழ்ந்து மேவ
உள்ளபோ கங்கள் ஆர்ந்தே
ஓய்வில்சா ரூபம் சார்வார். (9)

உரை :- வெள்ளை அடுக்கலரிப் பூவைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், மண்ணுலகத்திற்கு அரசராய், மகளிர் காதலித்துச் சூழ்ந்து பொருந்த இங்குள்ள போகங்கள் எல்லாவற்றையும் நுகர்ந்து, அழிவில்லாத சாரூப பதவியைப் பெறுவார்கள்.

குறிப்பு :- அள்ளல் - சேறு. ஆர்கலி - கடல். சுலாவுதல் - சூழ்ந்திருத்தல்.

## வெள்ளலரிப் பூ

57. சங்குவெள் ளலரிப் பூவைச்
சங்கரற் கேற்றி னோர்கள்
குங்குமக் கொங்கை மாதர்
குழுவெலாங் கூடி வாழ்ந்து
இங்குள போக மெல்லாம்
இசைந்துபின் இமையோர் போற்ற
மங்கலில் சிவலோ கத்தில்
மருவிமா முத்தி சேர்வார். (10)

உரை : சங்குபோல வெள்ளை நிறம் உடைய வெள்ளலரிப் பூவைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், குங்குமக் குழம்பு பூசப்பெற்ற தனங்களை யுடைய மாதர் கூட்டத்தைப் பொருந்தி, இவ்வுலகில் உள்ள போகங்களை யெல்லாம் துய்த்து வாழ்ந்து, பின்பு தேவர்கள் போற்றச் சிவலோகத்தை அடைந்து, அப்பால் முத்தியைப் பெறுவார்கள்.

## கஸ்தூரி அலரிப் பூ

58. கத்தூரி அலரிப் பூவைக்
கருணையங் கடவுட் கேற்றின்
வித்தார மான வித்தை
மேவிமே வலர்கள் போற்ற
முத்தாரம் மொய்த்த கொங்கை
மொய்குழல் மாதர் சூழ
நத்தாருங் கரத்தோ னாகி
நாடருங் கதியிற் சேர்வார். (11)

உரை: கத்தூரி அலரிப் பூவைக் கருணைக் கடவுளாகிய சிவபெருமானுக்குச் சாத்தினால், மிகுந்த கல்வியைப் பெற்றுப் பகைவர்களும் போற்றும்படி முத்தாரம் அணிந்த தனங்களை யுடைய மகளிர் சூழத் திருமால் பதவியைப் பெற்று, நினைத்தற்கரிய சிவகதியைப் பெறுவார்கள்.

## குங்கும அலரிப் பூ

59. குங்கும அலரிப் பூவைக்
குளிர்மதி முடியோற் கேற்றின்
அங்கண்மா ஞாலம் போற்றும்
அரியசீர் வைகுந் தத்தில்
செங்கண்மா லாகிப் பின்னர்ச்
சிவலோகம் சேர்ந்தே யென்றும்
பங்கமில் பாசம் நீங்கிப்
பரமாம் முத்தி சேர்வார். (12)

உரை: குங்கும அலரிப் பூவைச் சிவபெருமானுக்குச் சாத்தினால், உலகத்தார் புகழ்ந்து போற்றுகின்ற வைகுந்

தத்தில் திருமாலாய் வீற்றிருந்து. பின்னர்ச் சிவலோகத்தைச் சேர்ந்து வாழ்ந்து, அப்பால் பாசங்களின் நீங்கிப் பர முத்தியை அடைவார்கள்.

## செவ்வரத்தம் பூ

60. செவ்வரத் தம்பூ ஆனைத்
திருமுகற் கேற்றி னோர்கள்
எவ்வரத் தைக்கேட் டாலும்
எளிதினில் உதவு வான்;பின்
மைவரைத் திருமால் ஊரில்
வதிந்துபோ கங்கள் துய்த்துப்
பவ்வம்மொய்த் திடுபூ லோகம்
பரித்திடப் பண்ணு வானல். (13)

உரை :- செவ்வரத்தம் பூவை விநாயகருக்குச் சாத்தினவர்கள் எந்த வரத்தைக் கேட்பினும் அவற்றை அவர்கட்கு அப்பெருமான் தந்தருளுவார். மேலும் அவர் அவர்களை நீல மலைபோலும் திருமாலினது வைகுந்தத்தில் சேர்த்து அங்குள்ள போகங்களை நுகர்ந்து, பின்பு மண்ணுலக அரசராய் அதனை ஆளும்படி செய்வார்.

## சூரியகாந்திப் பூ

61. சூரிய காந்திப் பூவைச்
சூரியன் றனக்குச் சூட்டின்
காரிய பாவ மெல்லாங்
கழித்தொளி வடிவ மாகி
வாரியல் தனத்து மாதர்
வாஞ்சையால் மருவ வாழ்ந்தே
ஏரியல் சூரி யின்றன்
எழிற்பதத் திருப்ப ரன்றே. (14)

உரை: சூரியகாந்தப் பூவைச் சூரியனுக்குச் சாத்தினுல், தாங்கள் செய்த காரியத்தில் உண்டான பாவங்களை யெல்லாம் தொலேத்து, ஒளி வடிவம் (திவ்விய சரீரம்) பெற்றுச் சூரிய மண்டலத்தில் வாழ்வார்கள்.

## நந்தியாவர்த்தப் பூ

62. நந்தியா வர்த்தப் பூவை
நவில்சிவ ராத்தி ரிக்கண்
உந்துநா லாம்சா மத்தில்
உமையொரு பாகற் கேற்றின்
பந்தமில் ஞானம் மேவிப்
பரமாம் முத்தி சேர்வார்
சந்தனஞ் சாத்தி னோர்கள்
சாரூபம் சார்ந்து வாழ்வார். (15)

உரை: நந்தியாவர்த்தப் பூவைச் சிவராத்திரியில் நான்காம் சாமத்தில் சிவபெருமானுக்குச் சாத்தினுல், பாசங்கள் அற்று ஞானத்தைப் பெற்றுப் பரமுத்தியை அடைவார்கள். அதுபொழுது சந்தனம் சாத்தினவர்கள் சாருபத்தைப் பெற்று வாழ்வார்கள்.

## செவ்வந்திப் பூ

63, செவ்வந்திப் பூவை ஈசன்
திருமேனி தழையச் சாத்தின்
பவ்வஞ்சூ ழுலக மெல்லாம்
பண்புடன் செங்கோல் ஒச்சி
எவ்வந்தீர் மன்னர் போற்ற
இனியபோ கங்கள் எய்தித்
தெவ்வந்து பணிய வாழ்ந்தே
சிவபோக மதனில் சார்வார். (16)

உரை :- செவ்வந்திப் பூவைச் சிவபெருமானது திருமேனி முழுதும் விளங்கச் சாத்தினால், கடல் சூழ்ந்த உலகம் முழுவதையும் நல்ல வகையில் செங்கோல் செலுத்தி ஆண்டு, மன்னர் பலரும் போற்ற இனிய போகங்களை நுகர்ந்து, பகை யரசர்கள் வந்து வணங்க வாழ்ந்து, பின்பு, சிவலோகத்தை அடைவார்கள்.

## வெள்ளெருக்கம் பூ

64. வெள்ளெருக் கம்பூ ஈசன்
விரைமலர்த் தாளில் சாத்தின்
உள்ளபா வங்க ளெல்லாம்
ஒருவியே பருவம் மேவிக்
கள்ளவல் வினைகள் நீங்கிக்
கருணையால் அருளை மேவி
எள்ளரும் பரம முத்தி
இசைந்தென் றும் இனிது வாழ்வார். (17)

உரை : வெள்ளெருக்கம் பூவைச் சிவபெருமானது திருவடியில் சாத்தினால், தம்மைப் பற்றியுள்ள பாவங்கள் யாவும் நீங்கப் பெற்றுப் பக்குவ முதிர்ச்சியை யடைந்து, சஞ்சித கன்மங்களும் நீங்கி, இறைவனது கருணையால் ஞானத்தைப்பெற்றுப் பரமுத்தியை அடைந்து,என்றும் ஒரு பெற்றியராய் வாழ்வார்கள்.

## வெண்பட்டிப் பூ

65. பட்டிவெண் பூவை ஈசன்
பனிமலர்த் தாளில் சாத்தின்
அட்டசித் திகளும் மேவி
ஆகாச மார்க்க மாக

எட்டெனுந் திசையின் உம்பர்
எங்கணும் இசைந்து பின்னர்
வட்டவார் சடைஅ ரன்றன்
மலரடி மன்னு வாரே. (18)

உரை: வெண்பட்டிப் பூவைச் சிவபெருமானது திருவடிகளில் சாத்தினால், அட்ட மாசித்திகளையும் பெற்று, எட்டுத் திக்கிலும் ஆகாச கமனம் செய்யக் கூடியவர்களாய் வாழ்ந்து, பின்பு சிவபெருமானது திருவடி நிழலை அடைவார்கள்.

## மாணிக்கப் பட்டிப் பூ

66. மாணிக்கப் பட்டிப் பூவை
மாதேவர்க் கேற்றி னோர்கள்
ஆணிப்பொன் விமானத் தேறி
அமரர்கோன் ஆகி வாழ்ந்தே
காணிக்கை யாக மாதர்
கரத்தினில் மணிகள் ஏந்தச்
சேணுற்ற சிவலோ கத்தில்
சென்றுசா ரூபம் சேர்வார். (19)

உரை: மாணிக்கப் பட்டிப் பூவை மகாதேவனாகிய சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், ஆணிப் பொன்னாலாகிய விமானத்தில் ஏறிச் சென்று இந்திரனாகி வாழ்ந்து, உருத்திர மகளிர் தாங்கள் தரும் காணிக்கைப் பொருள்களாக நவமணிகளை ஏந்தி எதிர்கொள்ள, எல்லா உலகங்கட்கும்மேல் உள்ள சிவலோகத்தில் சென்று சாரூப பதவியில் வாழ்வார்கள்.

## பொன் ஆவிரம் பூ

67. பொன்னின்ஆ விரம்பூ ஒன்றைப்
புனிதனுக் கேற்றி னோர்கள்
தன்னொரு சிவலோ கத்தில்
சார்ந்திருந் தனந்த காலம்
பின்னர்சற் குருவால் ஞானம்
பெற்றுப்பே ரின்ப மார்ந்தே
அன்னிறை கண்டன் தாளில்
அனுதினம் அடைந்து வாழ்வார். (20)

உரை: பொன் ஆவிரம் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், அப்பெருமானுடைய உலகத்தில் பல காலம் வாழ்ந்திருந்து பின்னர்ப் (பூமியில் பிறந்து) சற்குருவால் ஞானம் பெற்றுச் சிவபெருமானது திருவடியில் சேர்ந்து, என்றும் பேரின்பம் உற்று வாழ்வார்கள்.

குறிப்பு: அல் நிறை கண்டன் - இருள் நிறைந்த கழுத்தை (நீலகண்டத்தை) உடையவன்.

## வெள்ளுமத்தம் பூ

68. மத்தைவெண் பூவை ஈசன்
மணிமுடி யதனில் சாத்தின்
மெத்துபோ கங்கள் ஆர்ந்து
வெறுத்துவீ டடைவான் வேண்டிச்
சித்தம்அன் புருவ மாகிச்
சிவஞானம் குருவாற் பெற்று
நித்தஆ னந்தம் ஆர்ந்தே
நீடுவர் பரம முத்தி. (21)

உரை: வெள் ஊமத்தம் பூவைச் சிவபெருமானுடைய திருமுடியில் சாத்தினல், நிறைந்த பல போகங்களை நுகர்ந்து, பின்பு அவற்றில் வெறுப்புத்தோன்றி வீடு பேற்றில் வெறுப்புண்டாகி, உள்ளம் அன்பே வடிவாகி குருவால் சிவஞானம் பெற்றுப் பரமுத்தியை என்றும் எய்தி, பரமானந்தத்தில் நிலைத்திருப்பார்கள்.

## பொன்னூமத்தம் பூ

69. பொன்மத்தம் பூவில் ஒன்றைப்
புனிதனுக் கேற்றி ஞோர்கள்
தன்மத்து மனத்தூ யோராய்த்
தரணியெல் லாம்பு ரந்தே
கன்மத்தை நீக்கி ஞானம்
கருணைஆ தரவால் பெற்றே
சென்மத்தை நீக்கிக் கொண்டு
சிவசாயுச் சியத்தில் சேர்வார். (22)

உரை: பொன் ஊமத்தம் பூ ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் தூய தருமசிந்தை உடையவர்களாய், உலகம் முழுவதையும் ஆண்டு, பின்பு கன்மங்களைத் தொலைத்து, இறைவன் திருவருளால் ஞானத்தைப் பெற்றுப் பிறப்பைக் கடந்து, சிவசாயுச்சத்தை அடைவார்கள்.

## கருவூமத்தம் பூ

70. கருமத்தை யின்பூ ஈசன்
கதிர்முடி ஏற்றி ஞோர்கள்
கருமத்தைத் துலைநே ராதல்
கண்டரு ளுருவாய் வந்தே

கருமத்தை வென்று, மாயை
கழற்றி,ஆ ணவத்தை மாய்த்தே
கருமத்தின் ததிபோல் உள்ளம்
கருதுசற் குரவ ராவார். (23)

உரை :- கருவூமத்தம் பூவைச் சிவபெருமானது திருமுடியில் சாத்தினவர்கள், பக்குவர்களுடைய இருவினை ஒப்பு முதலியவற்றை நோக்கி அவர்களது மும்மலங்களையும் நீக்கித் தயிரில் நெய்போல அவர்கள் உள்ளத்தில் ஞானத்தை விளங்கச் செய்கின்ற அருள்வடிவாகிய சற்குரவராய் வீற்றிருப்பார்கள்.

குறிப்பு ; மத்தின் ததி - கடையத்தக்க தயிர்.

## வழுதலைப் பூ

71. வழுதலைப் பூவைக் கன்னி
மாதமுற் பக்கந் தன்னில்
கெழுமும்அட் டமிமுன் மூவேழ்
கிளர்தினம் கேதா ரத்தில்
அழகுள நாதற் கேற்றின்
ஆண்டிரு பத்தொன் றாகில்
விழைவன எல்லாம் இந்த
மேயசென் மத்தின் மேவும். (24)

உரை :- வழுதலைப் பூவைப் புரட்டாசி மாதத்துப் பூர்வ பட்சத்து அட்டமி முதலாக இருபத்தொரு நாள் கேதார நாதர்க்குச் சாத்தி வழிபட்டால், இருபத்தோர் ஆண்டிற்குப் பின் தாங்கள் நினைத்தவற்றையெல்லாம் இப்பிறப்பிலே பெறுகின்ற நிலை உண்டாகும்.

குறிப்பு :- 'வழுதலை' என்பது வழுதுணை.

## எள்ளுப் பூ

**72.** எள்ளின்பூ எண்ணெய் எள்ளே
ஈசனுக் கேற்றி ஞேர்கள்
உள்ளன்பால் சிங்க மாதத்
துற்றிடும் பருவந் தன்னில்
எள்ளொன்று நிரம்பச் சாத்தின்
எண்ணிய எல்லாம் எய்தி
எள்ளும்பா வங்கள் எல்லாம்
இகந்துசா ரூபம் எய்தும். (25)

உரை: எள்ளுப் பூ, எள்ளின் நெய், எள்ளு இவை களைச் சிவபெருமானுக்கு ஆக்கியவர்கள், தாங்கள் செய்த பாவங்களின் நீங்குவர். ஆவணிமாதப் பௌர்ணமையில் சிவபெருமானுக்கு எள்ளுச் சாத்திஞல், நினைத்த பயன்கள் கைகூடி, பாவங்கள் யாவும் நீங்கச் சாரூப பதவி கிடைப் பதாகும்.

## செம்பருத்தி நூலின் பயன்

**73.** செம்பருத் திப்பஞ் சாலே
திகழமுந் நூலைச் செய்தே
நம்பனுக் கேற்றி ஞேர்கள்
நான்முகன் பதத்தை நண்ணி
உம்பருக் குரிய ஞகி
உயர்சிவ லோகம் உற்றே
நம்பனுக் கடியா ரோடு
நண்ணிவீற் றிருப்ப ரன்றே. (26)

உரை : செம்பருத்திப் பஞ்சினால் பூணூல் செய்து சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், பிரமலோகத்தை அடைந்து, பின்பு அதற்குமேலே உள்ள உலகங்கட்கும் உரியவராய் அதற்குப்பின், எல்லாவற்றிற்கும் மேலே உள்ள சிவலோகத்தில் சென்று அடியவரது திருக்கூட்டத்தில் சேர்ந்து வீற்றிருப்பார்கள்.

குறிப்பு :- புட்ப பலனைக் கூறிவருபவர் பயன், பற்றிச் சிறுபான்மை பிறவற்றையும் உடன் கூறினார்.

## 5. பத்திர பலன்

### வில்வம்

74. வில்வமே புனித னாகும்;
விளம்புவில் வத்தின் மிக்காம்
வில்வமுள் சத்தி யாகும்;
வில்வத்தின் கோடு வேதம்;
வில்வவேர் பதினோர் கோடி
வியனுருத் திரரே யாகும்;
வில்வமேத் தூார்க்கே தேவர்
மெய்வடி வாகு மன்றே. (1)

உரை :- பத்திரங்களும் புட்பத்திற்குச் சமமாகக் கொள்ளப்படுதலால், இது முதல் முப்பத்தொன்பது செய்யுட்களால் பத்திரங்களின் பயன் கூறுகின்றார்.

பத்திரங்களுள் வில்வம் சிவசொரூபம்; வில்வமரத்தில் உள்ள முட்கள் சத்தி சொரூபம்; கிளைகள் வேதம்; வேர் பதினொருகோடி உருத்திரர்கள்; ஆதலின், வில்வமரத்தை வணங்குபவர்கள் தெய்வ வடிவத்தைப் பெறுவர்.

75. கூவிளம் ஒன்று சாத்தின்
குலவுசா லோக மாகும்;
கூவிளம் இரண்டு சாத்தின்
குலவுசா மீப மாகும்;
கூவிளம் மூன்று சாத்தின்
குலவுசா ரூப மாகும்;
கூவிளம் நான்கு சாத்தின்
கூடுஞ்சா யுச்சந் தானே. (2)

உரை :- சிவபெருமானுக்கு வில்வம் ஒன்று சாத்தினால் சாலோக பதவியும், இரண்டு சாத்தினால் சாமீப பதவியும், மூன்று சாத்தினால் சாரூப பதவியும், நான்கு சாத்தினால் சாயுச்ச பதவியும் கிடைக்கும்.

76. வில்வமே நியம மாக
விமலனுக் கணிவோர் வேறு
வில்வம்இல் லாதி ருப்பின்
மீளவுங் கழித்தே அந்த
வில்வமே கழுவி நீரால்
மீளவும் சாத்த லாகும்;
வில்வம்ஓர் திங்க ளன்றி
மிக்கநாள் சாத்த லாகா. (3)

உரை :- நாள்தோறும் வில்வம் தவறாது சாத்திப் பூசை செய்பவர்கள், வில்வம் கிடையாவிடின், முன்னாள் சாத்திய வில்வத்தையே எடுத்து தூய நீரால் கழுவி மீளவும் சாத்தலாம். இவ்வாறு ஒரு மாதம் வரையில் சாத்தலாம். அதற்கு மேற்பட்ட நாள்களில் சாத்துதல் கூடாது.

77. கூவிளம் பரனுக் கேற்றக்
கூடிய புண்ணி யத்தில்
கூவிளம் போலப் பொன்ஞல்
குயிற்றிடிற் பாதி யாகும் ;
கூவிளம் இரசி தத்தால்
குயிற்றிடில் பாதி யாகும் ;
கூவிளம் வேருென் ருலே
குயிற்றிடில் அதனிற் பாதி. (4)

உரை :- வில்வத்தைப் பொன்ஞல் செய்து சாத்திஞல், உண்மையான வில்வத்தைச் சாத்திய பயனில் பாதிப் பயன் உளதாகும். வெள்ளியால் செய்து சாத்திஞல், பாதியிற் பாதிப் பயனும், பிற பொருள்களால் செய்து சாத்திஞல், அதனிற் பாதிப் பயனும் கிடைக்கும்.

78. பீடிகை ஒன் றில் ஐந்து
பிறங்குவில் வங்கள் வைத்தே
ஈடுசேர் நடுவில்வத்தோ
டிசையஓர் துளபம் வைத்து
நீடுவில் வச்சி வன்ருன்
நிகழ்அரித் துளபத் தேவி
கூடி வாழ் கின்ருன் என் று
குலவிய சிந்தை செய்தே. (5)

உரை :- ( வில்வத்திலேயே சிவனைப் பூசைசெய்யலாம்; அவ்வாறு பூசை செய்யும் முறை இது' என்று கூறுகின்ருர்.)

ஓர் ஆசனப் பலகைமேல் ஐந்து வில்வங்களை ( நான்கு திசைகளிலும் நான்கும், நடுவில் ஒன்றுமாக ) வைத்து, நடுவில் உள்ள வில்வத்தின் பக்கத்தில் ஒரு துளசியையும் வைத்து, வில்வ வடிவில் உள்ள சிவன் திருமாலுக்குரிய

துளசி வடிவில் உள்ள சத்தியோடு கூடியிருப்பதாகப் பாவித்து,

79. உளந்தனிற் கூர்ந்த பூவை
உளுற்றியே பணிந்து சூழ்ந்தோர்
துளங்கலில் போகம் துய்த்துத்
துலங்கிய விமானம் ஏறிக்
கிளர்ந்திடு கோடி கோடிக்
கிளையுடன் சிவலோ கத்தில்
வளர்ந்திடும் போக மெல்லாம்
மருவிமா முத்தி சேர்வார். (6)

உரை :- விருப்பமான மலர்களைக் கொண்டு அருச்சித்து, வணங்கி வலம் வந்தவர்கள், தளர்ச்சியில்லாத பல போகங்களை நுகர்ந்து, ஒளி பொருந்திய விமானத்தில் ஏறிப் பல கோடி சுற்றத்தாருடன் சிவலோகத்தை அடைந்து அங்குள்ள போகங்களைத் துய்த்து வாழ்ந்து, பின்பு முத்தியை அடைவார்கள்.

80. வில்வமும், கிளுவை தானும்,
விளாவும், வெண் ணொச்சி தானும்,
நல்லமா விலிங்கை தானும்
ஞாயிற்றுப் பருவந் தன்னில்
முல்லைமால் விடையான் பாத
முளரியில் கூடச் சாத்தின்
சொல்லொணு ஞானம் மேவும்;
சொலும்இவை பஞ்ச வில்வம். (7)

உரை : 'வில்வம், கிளுவை, விளா, வெண்ணொச்சி, மாவிலிங்கை' என்னும் இவை பஞ்சவில்வமாகும். இவைகளை

ஞாயிற்றுக்கிழமையில்வரும் பௌர்ணிமையில் சிவபெருமானுடைய திருவடிகளில் பொருந்தச் சாத்திஞல், சொல்லுதற்கரிய மெய்ஞ்ஞானம் உண்டாகும்.

## வில்வம் எடுக்கலாகாத நாட்கள்

81. பன்னுமா தப்பி றப்புப்
பகர்சோம வாரந் தானும்
மன்னும்மூ வைந்தும் நான்கும்
வருபதி ஞன்கும் எட்டும்
பின்னும்ஒன் பதுவு மான
திதிகளும் பெருமை வில்வந்
தன்னைவந் தெடுக்க லாகா
தெடுத்திடில் நரகம் சார்வார். (8)

உரை: மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணிமை, சதுர்த்தி, சதுர்த்தசி, அட்டமி, நவமி ஆகிய திதிகள் – இந்நாட்களில் வில்வத்தை மரத்திலிருந்து எடுத்தல் கூடாது. எடுத்தால் நரகத்தை அடைவார்கள்.

குறிப்பு: இவ்விலக்கின் இன்றியமையாமை பற்றி இந் நூலுட் கூறினர்.

## துளசி

82. துளசியின் இலைபூ ஒன்றைத்
தோகைஓர் பாகற் கேற்றின்
வளமலி மாஸ்ப தத்தின்
மருவவே வாழ்ந்தி ருந்தே
இளமதி அணிந்தோன் பாங்கர்
எழில்புனை சாரூ பத்தில்
உளமகிழ் ஞானம் மேவி
உயர்பர முத்தி சேர்வார். (9)

உரை :- துளசியினது இலைகளிலாயினும், பூக்களிலாயினும் ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினால், திருமாலினுடைய வைகுந்தத்தில் வாழ்ந்து, பின்பு சிவலோகத்தில் சாரூப பதவியைப் பெற்றிருந்து, பின் ஞானத்தை அடைந்து, பரமுத்தியைப் பெறுவார்கள்.

குறிப்பு :- துளசியின் பூவை 'கதிர்' என்பர்.

83. கருந்துழாய் மாலுக் கேற்றின்
 கலகவேல் விழியார் போகம்
அருந்திநான் முகனே யாகி
 அளவகல் போகம் ஆர்ந்தே
யிருந்துபின் வைகுந் தத்தில்
 இசைந்துமால் போலும் ரூபம்
பொருந்திஆ யிரங்கற் பங்கள்
 போனபின் புகழ்மால் ஆவார். (10)

உரை :- கருந்துளசியைத் திருமாலுக்குச் சாத்தினால் மகளிர் போகத்துடன் மற்றைய போகங்களையும் நிரம்பத் துய்த்துப் பின் வைகுந்தத்தை அடைந்து திருமாலின் சாரூபத்தைப் பெற்று ஆயிரகற்பங்கள் இருந்து, அதன்பின் திருமாலாகி அப்பதவியில் வாழ்வார்கள்.

குறிப்பு :- 'கலகம்' என்றது காதலை.

84. திங்கள்முன் ஓணம் வெள்ளி
 செவ்வாய்ஆ தித்தன் வாரம்
மங்கிராக் காலை மாலை
 மன்அப ராணம் எட்டும்
தங்குபன் னிரண்டீ ரேழும்
 சாற்றும்ச ருவாணி யோடும்
புங்கமார் விதிபா தந்தான்
 புகழ்துழாய் கொய்ய லாகா. (11)

உரை :- ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமை களிலும், திருவோண நட்சத்திரத்திலும், அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணிமை, அமாவாசை என்னும் திதிகளிலும், * விதிபாத யோகத்திலும் இரவு, வைகறை, மாலை, பிற்பகல் என்னும் காலங்களிலும் துளசியைச் செடியிலிருந்து எடுக்கலாகாது.

குறிப்பு :- 'காலை' என்றது வைகறையை. அபராணம் - பிற்பகல்.

85. துளபநீள் கதிருள் மன்னும்
தூயபூ அலர்ந்த காலைக்
கிளரும்நாள் ஓரா தென்றும்
கெழுமிய இலை இரண்டே
அளவிய கதிரெ டுத்தே
அரன்றனக் கணிய லாகும்;
களிமதக் கரிமு கத்துக்
கடவுளுக் காகா தன்றே. (12)

உரை :- துளசிக் கதிருள் பொருந்தியுள்ள பூக்கள் மலர்ந்தபின் கீழே இரண்டு இலைகளைமட்டும் உடையதாயிருந்தால் அவற்றை இன்ன நாள் என்பதைப் பாராமல் எந்த நாளிலும் எடுத்துச் சிவபெருமானுக்குச் சாத்தலாம்.

துளசி விநாயகருக்கு ஆகாது.

---

86. துளபம்ஏழ் வாரங் காறும்
துலங்கவே சாத்த லாகும்;
துளபம்ஓர் வருடங் காறும்
தூள்செய்து சாத்த லாகும்;

---

* 'சத்தமி' திதியிலும் துளசி எடுத்தல் கூடாது என்பர்.

கிளரும்முக் கிளைவில் வத்தைக்
கெழுமவைத் துலர்த்தித் தூள்செய்
தளவில்கா லங்க ளெல்லாம்
அரன்றனக் கணிய லாகும். (13)

உரை :- ஒருநாள் எடுத்துவைத்த துளசியை ஏழுவாரம் வரையில் வைத்திருந்து சாத்தலாம். அதை உலர்த்தித் தூள் செய்து வைத்தால், ஓர் ஆண்டு வரையில் சாத்த லாகும். மூன்று கிளையுடைய வில்வத்தை உலர்த்தித் தூள் செய்தால், எத்தனைக் காலமும் சாத்தலாம்.

குறிப்பு : தூள்களைச் சாத்துதல், அட்சதை எள் இவற்றைச் சாத்துதல் போலவாம்.

## மருக்கொழுந்து

87. தமனக மருக்கொ ழுந்தைத்
தையல்ஓர் பாகற் கேற்றின்
சமமகல் செல்வ மெல்லாம்
சார்ந்துகா மன்ப தத்தில்
கமலவாள் முகத்து மாதர்
காதலால் சூழ வாழ்ந்தே
இமையவர் சூழ்ந்து போற்ற
இந்திர னுவ ரன்றே. (14)

உரை : 'தமனகம்' எனப்படுகின்ற மருக்கொழுந்தைச் சிவபெருமானுக்குச் சாத்தினால் தம்மோடு பிறர் நிகராக மாட்டாத பெருஞ் செல்வத்தைப் பெற்று வாழ்ந்து, பின் மன்மத லோகத்தில் தாமரை மலர்போன்ற ஒளி பொருந்திய முகத்தை யுடைய மாதர்கள் சூழ வாழ்ந்து, பின்பு இந்திர பதவியைப் பெறுவார்கள்.

குறிப்பு :- 'தமனகம்' என்பதை, 'தவனம்' என்பர். இது வடசொல்.

## நாயுருவி

88\. நாயுரு விக்கொ ழுந்து
நற்கதிர் இலைசி வன்றன்
தூயபா தத்தில் சாத்தின்
சொல்லிடுஞ் சாலோ காதி
ஆயமுப் பதமும் மேவி
அரனரு ளதனல் ஆங்கே
தூயசித் துருவ ராகிச்
சொல்லொணு முத்தி சேர்வர். (15)

உரை: நாயுருவித் தளிரை சிவபெருமானுடைய திருவடியில் சாத்தினுல், (சிவலோகத்தில்) சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் மூன்று பதவிகளிலும் முறையாக வாழ்ந்து அவ்விடத்தே சிவனது திருவருளால் ஞானத்தை அடைந்து, பரமுத்தியைப் பெறுவார்கள்.

## பூளை

89\. பூளையின் கதிர்க்கொ ழுந்து
புனிதனுக் கேற்றி ஞேர்கள்
வேளின்ஐங் கணையால் மேலும்
விடயங்கள் மேவா தீசன்
தாளில்அன் பாகப் பத்தி
சார்ந்துஞா னம்பொ ருந்திக்
கோளகல் பரமா னந்தம்
குலவிவீற் றிருந்து வாழ்வார். (16)

உரை: பூளையின் கதிரை யாயினும், தளிரையாயி னும் சிவபெருமானுக்குச் சாத்தினுல், மன்மதனது ஐந்து மலர் அம்புகளால் உண்டாகின்ற காமநோயால் தாக்கப் படாது, சிவபெருமானுடைய திருவடியில் பத்தி மிகப் பொருந்திப் பின்பு ஞானத்தைப்பெற்றுத் துன்பம் இல்லாத பேரின்பத்தில் நீங்காது வாழ்வார்கள்.

நொச்சி

90. நொச்சியின் பத்தி ரம்பூ
நோன்மைசேர் சிவனுக் கேற்றின்
நச்சிய போகம் எல்லாம்
நண்ணியே சிவலோ கத்தில்
இச்சையாய் இருந்து ஞானம்
எய்திநம் ஈச னாலே
மிச்சமாம் பரம முத்தி
மேவிஇன் புறுவர் என்றும். (17)

உரை :- நொச்சியின் இலையையாயினும், பூவை யாயினும் சிவபெருமானுக்குச் சாத்தினுல், இவ்வுலகில் தாம் விரும்பிய போகங்களை யெல்லாம் பெற்று, பின்பு சிவலோகத் திலும் தம் இச்சைப்படி வாழ்ந்து, பின்னர்ச் சிவனே முன்னின்று அருள, ஞானத்தை அடைந்து, தாம் அது காறும் அடையாதிருந்த ஒன்ருகிய பரமுத்தியை அடைந்து எக்காலத்தும் இன்புற்றிருப்பார்கள்.

குறிப்பு :- நோன்மை - ஆற்றல்.

கரந்தை

91. கரந்தையின் இலையில் ஒன்றைக்
கணநாதர்க் கேற்றி னோர்கள்
திருந்துபூ லோகந் தன்னில்
செய்யகோல் செலுத்திப் பின்னர்ப்

பொருந்திய சிவலோ கத்தில்
புகுந்துசா ரூப மெய்தி
யிருந்துநீ டூழி வாழ்ந்தே
ஈசன்தா ளிணையில் சேர்வார். (18)

உரை :- கரந்தை யிலை ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினால், பூவுலகத்தில் அரசராய்ச் செங்கோல் செலுத்திப் பின்னர்ச் சிவலோகத்தில் சென்று சாரூப பதவியில் நெடுங் காலம் வாழ்ந்து, பின்பு சிவபெருமானது திருவடியை அடைவார்கள்.

செங்கீரை

92. செங்கீரை யிலையை ஈசன்
திருவடி யதனில் சாத்தின்
கொங்காரும் கற்ப கப்பூங்
கொம்பினில் அரசி ருந்தே
அங்காரும் அமரர்க் கெல்லாம்
அதிபதி யாகி மீண்டே
இங்காரும் போற்ற மேவி
எழிலுடை அரச ராவார். (19)

உரை :- செங்கீரையில் ஓர் இலையைச் சிவபெருமானுடைய திருவடியில் சாத்தினால், மணம் நிறைந்த பூக்கள் மிக்க கற்பக தருக்களின் கிளைகளாலான நிழலின்கீழ் தேவேந்திரனாய் அரசு வீற்றிருந்து, பின்பு இவ்வுலகத்திலும் யாவரும் போற்ற அரசராய்ப் பிறந்து வாழ்வார்கள்.

குறிப்பு :- கொம்பு, ஆகுபெயர்.

## மாசிப் பச்சை

93. மாசியின் பச்சை தன்னை
மாசியின் மகத்து நம்பன்
வாசமார் மலர்ப்ப தத்தின்
மகிழ்வொடுஞ் சாத்தி னோர்கள்
தேசமெல் லாம்பு ரக்கும்
திறலுடை மன்ன ராகி
நேசமார் சிவலோ கத்தில்
நீடூழி காலம் வாழ்வார். (20)

உரை :- மாசிப் பச்சையை மாசி மாதத்து மக நட்சத்திரத்தில் சிவபெருமானுடைய திருவடியில் மகிழ்ச்சியோடு சாத்தினவர்கள், பல நாடுகளையும் கைக்கொண்டு ஆள்கின்ற வலிமை வாய்ந்த அரசர்களாய் வாழ்ந்திருந்து, பின்பு சிவலோகத்தில் நீடூழி காலம் வாழ்வார்கள்.

## மலைப் பச்சை

94. மலைப்பச்சை இலைகொ ழுந்து
மருவிய கதிர்இ வற்றைத்
தலைப்படு மதியோற் கேற்றின்
சந்ததம் சிவலோ கத்தில்
நிலைப்பட இருந்து பின்னர்
நேசமாம் ஞானம் மேவித்
தொலைப்பில்சா யுச்சி யத்தில்
துன்னியே இன்பம் சூழ்வார். (21)

உரை :- மலைப் பச்சையின் இலையை யாயினும், தளிரை யாயினும், கதிரை யாயினும் சிவபெருமானுக்குச் சாத்தினால்,

பல காலம் சிவலோகத்தில் நிலையாய் இருந்து, பின்பு விரும்பத் தக்க சிவஞானத்தைப் பெற்று, சாயுச்சத்தை அடைந்து, பேரின்பத்தில் மூழ்குவார்கள்.

குறிப்பு :- சூழ்வார் - சூழப்பெறுவார்.

## திருநீற்றுப் பச்சை

95 திருநீற்றுப் பச்சை தன்னைச்
சிவன்றனக் கேற்றி னோர்கள்
கருநீறு செய்து ஞானம்
காட்டுசற் குரவ ராகி
ஒருநூறு யிரமா ணாக்கர்க்
குபதேசம் உதவிப் பின்னர்ப்
பெருஞான ரூபம் மேவிப்
பேரின்ப நேயம் ஆர்வார். (22)

உரை :- திருநீற்றுப் பச்சையைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் ,பிறப்பை நீறுக்கிப் பிறருக்கு ஞானத்தை அருளுகின்ற ஞானசிரியர்களாய் இலட்சம் மாணாக்கர்க்கு உபதேசம் செய்திருந்து பின்பு ஞானமே வடிவாய்ச் சிவ சாயுச்சம் பெற்றுச் சிவானந்தத்தில் திளைப்பார்கள்.

## எலுமிச்சம் பச்சை

96. எலுமிச்சம் பச்சை தன்னை
ஈசனுக் கேற்றி னோர்கள்
பலமிச்ச மாகும் இம்மைப்
பலன்எலாம் அனுப வித்தே

உலகுக்குள் அழகு ளோராய்
உயர்சிவ லோகம் உற்றே
நலம்மிக்க சாமீ பத்தில்
நண்ணுவர் எண்ணில் காலம். (23)

உரை :- எலுமிச்சம் பச்சையைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் மிகுதியாய்க் கிடக்கின்ற பல பயன்களை யெல்லாம் அனுபவித்து, உலகில் யாவரினும் மிக்க அழகுடையவர்களாய் வாழ்ந்து, பின் சிவலோகத்தில் நன்மை மிக்க சாமீப பதவியில் அளவில்லாத காலம் வாழ்வார்கள்.

குறிப்பு :- இது 'பச்சை' எனப்படும் பத்திரங்களில் ஒன்று.

சமுத்திராப் பச்சை

97. சமுத்திராப் பச்சை தன்னைச்
சங்கரற் கேற்றி னோர்கள்
சமர்த்தராய் உலகிற் கெல்லாந்
தாணுவாய் அழகு ளோராய்
அமைத்துணைப் பசுந்தோள் மாதர்
அனைவர்தம் போகம் ஆர்ந்தே
இமைத்தல்இல் லாவிண் ணோர்தம்
இறைவனா யிருந்து வாழ்வார். (24)

உரை : சமுத்திராப் பச்சையைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் எல்லா வகையான திறமையும் உடையவர்களாய் உலகத் தலைவராயும், அழகுள்ளவர்களாயும் பசிய மூங்கில் போலும் தோள்களையுடைய மகளிரது இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்து, பின் தேவேந்திர பதவியைப்பெற்று வாழ்வார்கள்.

குறிப்பு : அமை - மூங்கில். துணை, உவம உருபு.

## கதிர்ப் பச்சை

98. வளர்கதிர்ப் பச்சை தன்னை
மாதேவற் கேற்றி னோர்கள்
மிளிரும்முற் பவத்திற் செய்த
வினையெலாம் வீந்தே ஏகும் ;
தளர்வுறும் துகட்க ணங்கள்
சார்தரா ; அளவில் செல்வம்
விழைவுறு கற்ப காலம்
வியன்சிவ லோகம் மேவும். (25)

உரை: கதிர்ப் பச்சையைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள் முன் பிறப்பிற் செய்த பாவங்கள் யாவும் அழிந்தொழியும்; இப்பிறப்பிலும் பாவங்கள் அவர்களை அணுகமாட்டா; ஒரு கற்ப காலம் சிவலோகத்தில் அளவற்ற செல்வம் அவர்கட்கு உண்டாகும்.

## கொண்டை

99. கொண்டைப்பூ ஒன்றை ஈசன்
குலவிய பதத்தில் சாத்தின்
பண்டைப்பா வங்கள் எல்லாம்
மாறிடும் ; பழிகள் நீங்கும் ;
கண்டுற்ற மொழியார் சூழக்
கருதிய போகம் ஆர்ந்து
வண்டுற்ற கொன்றை யான்றன்
மலரடி மன்னு வாரே. (26)

99. உரை: கொண்டைப் பூ ஒன்றைச் சிவபெருமானுடைய திருவடியில் சாத்தினால், முற்பிறப்பிற் செய்த

பாவங்கள் யாவும் தொலையும். கற்கண்டுபோலும் இனிய சொல்லையுடைய மகளிர் சூழ, விரும்பிய இன்பங்களைத் துய்த்துப் பின் சிவபெருமான் திருவடியை அடைவார்கள்.

குறிப்பு: கண்டு - கற்கண்டு.

## குடத்தன் குதம்பை

100. குளிர்குடத் தன்கு தம்பைக்
கொழுந்துமார் கழிமா தத்தில்
கிளரும்ஆ றைந்து நாளும்
கெழுமிய பேரன் பாலே
இளமுலை உமையாள் பாகன்
இணையடி யதனில் சாத்தின்
உளமலி ஞானம் மேவி
யுறுவர்பே ரின்ப வாரி. (27)

உரை:- குடத்தன் குதம்பையின் கொழுந்தை மார்கழி மாதம் முப்பதுநாளிலும் சிவபெருமானது திருவடிகளில் பேரன்போடு சாத்தினால், ஞானத்தை அடைந்து முத்தி யின்பமாகிய கடலில் திளைப்பார்கள்.

## வன்னி

101, வன்னியின் இலைகொ ழுந்து
மாதேவர்க் கேற்றி னோர்கள்
தன்னிகர் சிவலோ கத்தில்
சார்ந்துபோ கங்க ளார்ந்தே
உன்னிய சாரு பத்தில்
உற்றுயர் ஞானம் மேவித்
தன்னிக ரின்றி யென்றும்
சார்வர்பே ரின்ப வாரி. (28)

உரை :- வன்னியினுடைய இலையையாயினும், கொழுந்தையாயினும் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், தனக்குப் பிறிதோர் உலகம் நிகரில்லாததாகிய சிவலோகத்தை அடைந்து அங்குள்ள போகங்களைத் துய்த்துப் பின் சாரூப பதவியில் வாழ்ந்து, அப்பால் ஞானத்தை அடைந்து முத்தியைப் பெறுவார்கள்.

### கிளுவை

102. கிளுவைமுக் கிளையை யீசன்
 கீர்த்திசேர் தாளில் சாத்தின்
இளமுலை மடவார் போகம்
 இசைந்துபின் வெறுத்தே யெல்லாம்
தளர்வறு விரத்த ளுகிச்
 சம்புவை யன்றி மற்றொன்
றுளபொருள் தனைவி ரும்பா
 துயர்சிவ ஞானம் சேர்வார். (29)

உரை :- கிளுவையின் மூன்று கிளையான இலையைச் சிவபெருமானது திருவடிகளில் சாத்தினால், மகளிர் போகம் பெற்றிருந்து, பின்பு அதன்கண் மட்டுமன்றி ஏனை எல்லாப் பொருள்களிலும் வெறுப்புக் கொண்டு, தளர்வில்லாத விரத்தராய்ச் சிவபெருமானைத் தவிரப் பிற எப்பொருளையும் விரும்பாத சிவஞானத்தைப் பெறுவார்கள்.

### மாவிலிங்கை

103. மாவிலிங் கைப்பன் னத்தின்
 மருவுமுக் கிளைசி வன்றன்
சேவடி யதனில் சாத்தின்
 சிறந்திடுங் கிளைமூ வேழும்;

தூவிலாச் சிவலோ கத்தில்
சார்ந்துசா மீபந் தன்பால்
சேவின ஞலே ஞானம்
சேர்ந்துபின் முத்தி சேர்வார். (30)

உரை :- மாவிலிங்கையின் மூன்று கிளையான இலையைச் சிவபெருமானுடைய திருவடியில் சாத்திஞல், சாத்தினவர்களது மூவேழ் தலைமுறையும் சிறந்து விளங்கும். சாத்தினவர் சிவலோகத்தில் சாமீப பதவியில் வாழ்ந்து, பின்பு சிவபெருமானது திருவருளால் ஞானத்தைப் பெற்று முத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- பன்னம் - ( பர்ணம் ) இலை. சே - எருது. மூவேழ் தலைமுறைகளாவன, தந்தை வழி ஏழும், தாய் வழி ஏழும், மாதுலன் (மனைவியின் தந்தை) வழி ஏழும் ஆன தலைமுறைகள்.

## விளா

104. விளவிலை கனிகாய் தம்மை
விமலனுக் கேற்றி ஞேர்கள்
உளமலி காதல் கூர்ந்தே
உலகெலாம் ஒருகு டைக்கீழ்
வளமலி நிழலில் ஆண்டு
மன்னவர் மதிக்க வாழ்ந்தே
இளமுலை மடவார் சூழ
இசைந்தின்பம் எய்து வாரே. (31)

உரை :- விளா மரத்தின் இலை, பழம், காய் இவற்றைச் சிவபெருமானுக்கு அர்ப்பணித்தவர்கள், உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுகின்ற அரசராய், ஏனைய

மன்னர் பலரும் மதிக்குப்படி வாழ்ந்து, மகளிர்கள் விரும்பிச் சூழ அவர்களது இன்பத்தை நுகர்ந்திருப்பார்கள்.

குறிப்பு :- இலையைச் சாத்துதலும், காய்கனிகளைப் படைத்தலும் செய்தல் வேண்டும் என்க.

சந்தனம்

105. சந்தனத் தருஅ ரைத்த
சாந்துசந் தனக்கொ ழுந்து
முந்துசித் திரைமா தத்தில்
முற்பரு வத்து முக்கண்
எந்தைபா தத்தில் சாத்தின்
எழுமூன்று தலைமு றைகள்
வந்தபா வங்கள் மாய்த்து
மருவுவர் சிவலோ கத்தில். (32)

உரை :- சந்தன மரத்தின் கட்டையை அரைத்த சாந்து, சந்தன மரத்தின் தளிர் இலைகளைச் சித்திரை மாதம் சுக்கில பட்சத்தில் சிவபெருமானது திருவடிகளில் சாத்தினவர்கள், மூவேழ் தலைமுறைகளிலும் உண்டான பாவங்களை அழித்துச் சிவலோகத்தை அடைவார்கள்.

குறிப்பு :- 'மூவேழ் தலைமுறை'- செய்யுள் 103 குறிப்புப் பார்க்க.

மா

106. மாந்தளிர் கனிகாய் பூவை
வைகாசி விசாக நாளில்
பாந்தளை அரையில் ஆர்த்த
பரமனுக் கேற்றி னோர்கள்

கூர்ந்தபுந் தியராய் மேவிக்
குலவிய அழகுள் ளோராய்ச்
சேர்ந்தசெல் வத்தி னோராய்ச்
சிவலோகம் சென் று வாழ்வார். (33)

உரை :- மா மரத்தினது தளிர், கனி, காய் இவைகளை வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் சிவபெருமானுக்கு ஆக்கியவர்கள், கூர்மையான அறிவும், உடல் அழகும், மிக்க செல்வமும் பெற்று வாழ்ந்து, பின் சிவலோகத்தை அடைவார்கள்.

குறிப்பு :- பாந்தள் - பாம்பு. ஆர்த்தல் - கட்டுதல். 'கூர்த்த' என்பது விகாரமாயிற்று.

எலுமிச்சை

107. எலுமிச்சை இலைகொ ழுந்தொன்
றிசைந்திடுங் கனிகாய் பூவும்
நலமுற்ற மாதந் தோறும்
நவில்பஞ்ச பருவம் நம்பன்
மலரொத்த பாதந் தன்னில்
மகிழ்வொடும் சாத்தி னோர்கள்
சலசத்து மாது நண்ணச்
சகமுழு தாளு வாரே. (34)

உரை :- எலுமிச்சை மரத்தின் இலை, தளிர், கனி, காய், பூ இவைகளை மாதந்தோறும் பஞ்ச பருவங்களில் சிவபெருமானுடைய திருவடிகளில் மகிழ்ச்சியோடு சாத்தினவர்கள், தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய இலக்குமி வந்து பொருந்த, உலகம் முழுவதையும் ஆளுவார்கள்.

குறிப்பு :- இருபட்சங்களிலும் உள்ள அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, மாதப்பிறப்பு இவை பஞ்ச பருவங்களாகும். சலசம் - தாமரை.

## நாரத்தை

108. நாரங்கத் திலைகொ ழுந்து
நற்கனி பூஎங் நாளும்
சாரங்கன் தன்னி ரண்டு
தாளின்மீ தன்பிற் சாத்தின்
வாரங்கண் அற்று வீழ
வளர்இள முலையின் மாதர்
தாரங்க ளாகி மேவத்
தரணியில் வாழ்வர் தாமே. (35)

உரை :- நாரத்த மரத்தின் இலை, தளிர், கனி, பூ இவைகளைத் திருமாலின் திருவடிகளில் அன்போடு சாத்தினால், மகளிர் பலர் மனைவியராய் வந்து மாலையிட, அவர்களுடன் இவ்வுலகில் இன்புற்று வாழ்வார்கள்.

குறிப்பு :- வார் - கச்சு. அங்கண் - அவ்வீடத்தில்.

## நாவல்

109. நாவலங் கனிகொ ழுந்து
ஞாயிற்றி னுத்த ரத்தில்
சேவுயர் கொடியி னன்றன்
சேவடி யதனில் சாத்தின்
பூவில்வாழ் அயன்ப தத்தில்
பொருந்திமா போகம் நண்ணிப்
பாவல ராகி யாரும்
பரவவே பண்பின் வாழ்வார். (36)

உரை :- நாவல் மரத்ினது பழம், தளிர் இவைகளை ஞாயிற்றுக்கிழமையோடு கூடிய உத்தர நட்சத்திரத்தில் சிவபெருமானது திருவடிக்கு அர்ப்பணித்தால், பிரம

லோகத்தை அடைந்து அங்குள்ள போகங்களை நுகர்ந்து பின்பு பூமியில் சிறந்த புலவர்களாகப் பிறந்து, யாவரும் புகழும்படி நற்பண்புடன் வாழ்வார்கள்.

## மருது

110. அருச்சுனத் திலைகொ ழுந்தை
அரன்றனக் கேற்றி னோர்கள்
அருச்சுனன் சிலைத்த ழும்பும்
அம்பிகை முலைத்த ழும்பும்
தரித்தவ னுலகின் மேவிச்
சாற்றொணு ஞானம் சார்வார்:
விரித்தசெஞ் சடையான் றுள்கள்
மேவுவார்; பிறவி மேவார். (37)

உரை :- மருத மரத்தின் இலையையாயினும், தளிரை யாயினும் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், அப்பெரு மானது உலகத்தில் சென்று வாழ்ந்து, அவ்விடத்தே ஞானம் பெற்று அவனது திருவடியை அடைவார்கள். மீண்டும் பிறவியை அடையமாட்டார்கள்.

குறிப்பு :- சிவபெருமான் அருச்சுனனது வில்லின் தழும்பை ஏற்ற வரலாற்றைப் பாரதத்திலும், அம்பிகையின் தனத் தழும்பை ஏற்ற வரலாற்றைப் பெரியபுராணத்திலும் காண்க.

## நெல்லி

111. நெல்லியின் காய்கொ ழுந்து
நிலவுகார்த் திகைமா தத்தில்
ஒல்லும்ஆ தித்த வாரத்
துலகநா யகனுக் கேற்றில்

எல்லையில் புசிப்பி னாலும்
எய்துபா வம்த விர்த்தே
அல்லியங் கோதை பாகன்
அமர்சிவ லோகம் ஆள்வார். (38)

உரை :- நெல்லி மரத்தினது காயையாயினும், தளிரை யாயினும் கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக் கிழமைகளில் சிவபெருமானுக்கு ஆக்கினவர்கள், தங்கள் அளவற்ற அனுபவத்தினால் உண்டான பாவங்களைப் போக்கிச் சிவ லோகத்தை அடைவார்கள்.

குறிப்பு :- அல்லியங் கோதை - அகவிதழ் பொருந்திய மலர்களால் ஆகிய மாலை. அஃது ஆகுபெயராய், அதனை யணிந்த உமாதேவியைக் குறித்தது.

## இலந்தை

112. பேரிலந் தைக்கொ ழுந்து
பேசிடுங் கன்னி மாதம்
சீரிய பூச நாளில்
சிவன்றனக் கேற்றி னோர்கள்
ஏரியல் உலக மெல்லாம்
எளிதினில் ஆண்டு மாதர்
பூரண போகம் ஆர்ந்து
பொருந்துவர் சாமீ பத்தில். (39)

உரை :- இலந்தை மரத்தின் தளிரைப் புரட்டாசி மாதம் பூச நட்சத்திரத்தில் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், உலகம் முழுவதையும் எளிதில் ஆண்டு, மகளிரது நிறைந்த இன்பத்தையும் பெற்றுப் பின் சிவசாமீபத்தை அடை வார்கள்.

குறிப்பு :- ஏர் இயல் - எழுச்சி பொருந்திய.

# பத்திர புட்பங்களுக்கு ஆகாத பிற மரங்களால் பெறும் பயன்

## அகில்

113. அகில்மர மதுபி ளங்கே
அரிந்திடுங் கட்டை தன்னைத்
திகழ்தரு குளிர்கா லத்துச்
செந்தழல் கொளுவி யீசன்
மகிழ்தர முன்னே வைக்கின்
மருவிடும் செல்வ மெல்லாம்;
புகழ்புனை சிவலோ கத்தில்
பொருந்திவீற் றிருப்பர் தாமே. (1)

உரை :- (இது முதல் இருபத்தேழு செய்யுட்களால் பத்திர புட்பங்களுக்கு ஆகாத பிற மரங்களால் பெறும் பயன் கூறுகின்றார்.)

அகில் மரத்தைப் பிளந்து நறுக்கிக் கொண்ட கட்டையை உலர்த்திக் குளிர் காலத்தில் சிவபெருமான் முன்னே நெருப்பில் இட்டுப் புகைத்தால், பல வகையான செல்வங்களும் உண்டாகும். பின்னர்ச் சிவலோகத்தில் சென்று வாழலாம்.

## பலா மா வாழை

114 வருக்கையம் பலவின் மன்னும்
வண்கனி மாவின் மேவித்
தருக்கிய கனிஅ ரம்பைத்
தண்கனி யதுவே சாற்று

மருக்கொள்முக் கனியுங் கூட்டி
மருவானிப் பருவந் தன்னில்
அரற்குத விடிற்சா ரூபம்
அனுதினம் அமர்ந்து வாழ்வார். (2)

உரை:- 'வருக்கை' எனப்படுகின்ற பலா மரத்தின் பழம், மா மரத்தின் பழம், வாழை மரத்தின் பழம் ஆகிய இவை மூன்றும் 'முக்கனி' எனச் சிறப்பித்துக் கூறப்படும். அவை மூன்றையும் ஒருசேர ஆனி மாதத்துப் பௌர்ணிமையில் சிவபெருமானுக்கு ஆக்கினவர்கள் சாரூப பதவியைப் பெறுவார்கள்.

குறிப்பு:- சாற்று மருக்கொள் முக்கனி - சுவை மிக்க சாற்றினை நிரம்ப உடைய மூன்று பழங்கள். இவ்வாறு கூறியதனால், இவற்றைப் பிழிந்தெடுத்த சாற்றினை அர்ப்பணித்தல் சிறப்பு என்பது அறியப்படும். இவை அபிடேகமாகவும், நிவேதனமாகவும் செய்தற்குரியன.

தமரத்தை

115. தமரத்தைக் கனியை ஆனி
சார்ந்தஉத் தராட நாளில்
குமரற்குத் தந்தை யான
குழகனுக் கேற்றி னோர்கள்
அமரற்குத் தலைவ னாகி
அளவில்போ கங்கள் ஆர்ந்தே
சமமறச் சாமீ பத்தில்
சந்ததம் இருந்து வாழ்வார். (3)

உரை.- தமர்த்தம் பழத்தை ஆனி மாதத்து உத்தராட நட்சத்திரத்தில் சிவபெருமானுக்கு ஆக்கினவர்கள்,

இந்திர பதவியைப் பெற்று அளவற்ற போகங்களை நுகர்ந்து, பின் நிகரற்ற சிவசாமீப பதவியைப்பெற்று வாழ்வார்கள்.

## பனை

116. பனைமரம் ஒன்று தன்னைப்
பரன்முன்பு நாட்டி வைத்தே
வினைதவிர் விருச்சி கத்தின்
மேவுகார்த் திகையில் தீபந்
தனைஅதில் ஏற்றி வன்னி
தழல்எழச் சாத்தி னோர்கள்
முனிவராய் இருந்து பின்னும்
முந்துசா மீபம் சேர்வார். (4)

உரை :- ஒரு பனை மரத் தூணைக் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் சிவபெருமானது திருமுன்பில் நாட்டி, அதன் உச்சியில் ஒரு விளக்கை ஏற்றிப் பின் முழுவதையும் தீச்சுடர் பற்றி எரியச் செய்தவர்கள், உலகப் பற்று நீங்கி முனிவர்களாய்த் தவம் செய்திருந்து, பின்பு சாமீப பதவியை அடைவார்கள்

குறிப்பு :- இவ்வாறு செய்தலை 'சுட்கப் பனை கொளுத்துதல்' என்பர். சுட்கம் - சூளை ; பெருந் தீ. சுட்கப் பனைத் தீ, சிவபெருமான் பிரம விட்டுணுக்களது போரின் இடையே அவர்களால் அடிமுடி அறியப்படாத அனற்பிழம்பாய்த் தோன்றினமையைக் குறிப்பது. இவ் அனற்பிழம்பால் எங்கும் ஒளி மயமானதைக் குறிப்பதே கார்த்திகை மாதக் கார்த்திகை நாளில் எங்கும் விளக்கேற்றிக் கொண்டாடும் விளக்கீட்டு விழா. இஃது அரி அயன் என்பவரால் அளந்தறியப்படாத தேயு லிங்க மாகிய அண்ணாமலைத் தலத்திற்குச் சிறந்ததாய் இருத்தல் யாவரும்

அறிந்தது. இது தமிழ் நாட்டு வழக்கம். ‘தீபாவளி - விளக்கு வரிசை’ என்னும் விழா, வடநாட்டு வழக்கம். கார்த்திகை விழா, சிறந்த நோன்பு நாள். தீபாவளி, உண்டாட்டு நாள்.

## புளி

117 புளியினின் பலத்தை நம்பன்
புனிதமே னியினில் சாத்தின்
அளியினம் ஆர்பூ ஆரும்
அளகம்ஆர் அரம்பை மாதர்
புளகிதக் கொங்கை போகம்
புணர்ந்துசா ரூபம் போந்தே
உளமலம் ஒருவி யாரும்
உறலரு முத்தி சேர்வார். (5)

உரை :- புளிய மரத்தின் பழத்தை (புளியை)ச் சிவ பெருமானது திருமேனியில் (செம்பு முதலிய சில உலோகங்களாலான திருவுருவத்தில்) சாத்தினவர்கள், (அபிடேகித்தவர்கள்) மகளிர் போகத்தைப் பெற்றுப் பின் சாரூப பதவியில் வாழ்ந்து, அதன்பின் பாசங்களின் நீங்கி, அடைதற்கு அரிய பரமுத்தியை அடைவார்கள்.

## கமுகு

118 பூகமார் பழக்காய்க் கொத்துப்
பொலிவுற அலங்க ரிக்க
நாகம்மேல் அணிந்த நம்பன்
நயந்திடு நிவேத னத்திற்

காகவே துவர்க்காய் நல்க
ஆகமார் போக மெல்லாம்
மோகமாய் அருந்திப் பின்னர்
முதுசிவ லோகம் சேர்வார் (6)

உரை: கமுக (பாக்கு) மரத்தினது பழக் கொத்துக்களாலும், காய்க் கொத்துக்களாலும் சிவபெருமானது ஆலயம், மண்டபம், உலா வரும் வீதி முதலியவைகளை அழகு படுத்துவதாலும், அப்பெருமானது நிவேதனத்திற்காகக் கமுகங் காய் கொடுப்பதாலும் மக்கள் இவ்வுடம்பினுல் அனுபவிக்கத்தக்க இன்பங்களை யெல்லாம் தாங்கள் விரும்பியவாறே அனுபவித்து, அதன் பின்னர்ப் பெரிதாகிய சிவலோகத்தை அடைவார்கள்.

குறிப்பு :- "மோகமாய்" என்றது, 'விரும்பியபடியே' என்றவாறு.

## தென்னையில் இளநீர்

### பச்சிள நீர்

119 பச்சிள நீரை ஒன்று
பரமனுக் கேற்றி ஞேர்கள்
உச்சித மான வித்தை
யுடையராய் இருந்து பின்னர்
நச்சிய போகம் எல்லாம்
நட்பொடும் அனுப வித்தே
எச்சமில் சாமீ பத்தில்
இருந்தின்பம் எய்தி வாழ்வார். (7)

உரை :- பச்சிள நீர் ஒன்றைச் சிவபெருமானுக்கு அர்ப்பணித்தவர்கள், தாங்கள் விரும்பிய கல்வியைப்பெற்று,

விரும்பிய போகங்களை நண்பர் உறவினரோடும் நுகர்ந்து பின்பு குறைவில்லாத சாமீப பதவியை அடைந்து இன்புற்றிருப்பார்கள்.

குறிப்பு :- நாம் பெரும்பாலாகக் காணும் இளநீரே பச்சிளநீர். அர்ப்பணித்தல், இங்கு, அபிடேகித்தலும், நிவேதித்தலும் ஆகும்.

## செவ்விள நீர்

120 செவ்விள நீரை ஈசன்
திருமேனிக் கேற்றி னோர்கள்
அவ்வியம் ஓவி ஓவா
அளவில்செல் வங்க ளார்ந்தே
கொவ்வைவாய் அரம்பை மாதர்
குழுவெலாம் சூழ மேவி
நவ்விசேர் கரன்சா மீபம்
நண்ணியே நாளும் வாழ்வார். (8)

உரை :- செவ்விள நீரைச் சிவபெருமானது திருமேனியில் அபிடேகம் செய்தோர், பிறர் ஆக்கம் கண்டு பொறாமையாகிய தீக்குணம் நீங்கி, என்றும் நீங்காத பெருஞ் செல்வத்தைப் பெற்று வாழ்ந்து, பின் சுவர்க்க லோகத்தில் தேவ மாதர் குழாங் குழாமாகிச் சூழ இன்புற்றிருந்து, பின்பு சிவ சாமீபத்தில் என்றும் இருப்பார்கள்.

குறிப்பு :- பொறாமை யிருப்பின் செல்வம் பெறுதல் கூடாமையின், " அவ்வியம் ஓவி " என்றும் பொறாமை இல்லாதவரைச் செல்வம் நீங்காமையின், 'ஓவாச் செல்வம்' என்றும் கூறினர்.

" அழுக்கற் றகன்றாரும் இல்லை; அஃதில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் "

என்ற திருக்குறளை இங்கு நினைவு கூர்க. இதற்கு மாறாகப் பொறாமை உடையவர் செல்வம் பெறுதலும், பொறாமை யில்லாதோர் வறுமை அடைதலும் ஆகிய சிறுபான்மை நிகழ்ச்சிக்கு அவர்தம் முன்னைப் பெருவினையே காரணம் என்பது,

" அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும் "

என்னும் குறளில் கூறப்பட்டது. நினைத்தல் - நூல்களின் வழிச் சிந்தித்தல்.

## சூரிய கௌளி இளநீர்

121 சூரிய கௌளி யாகத்
தோன்றிய இளநீர் தன்னை
நீரியல் சடையற் கேற்றின்
நீடூழி காலம் வாழ்ந்தே
வீரிய மன்ன ராகி
மிக்கபோ கங்கள் ஆர்ந்தே
சீரிய சாரூபத்தைச்
சேர்ந்தென்றும் சிறந்து வாழ்வார். (9)

உரை :- 'சூரிய கௌளி' எனப் பெயர் பெற்றுள்ள இளநீரைச் சிவபெருமானுக்கு ஆக்கினால், இவ்வுலகில் நெடுங்காலம் அரசராய்ப் பல போகங்களை நுகர்ந்து, பின்பு சாரூப பதவியில் என்றும் வாழ்வார்கள்.

குறிப்பு :- இது வெயிலை மிகுதியாக் வாங்குதலால் இப் பெயர் பெற்றது.

## சந்திர கௌளி இளநீர்

122 சந்திர கௌளி யாகச்
சாற்றிடும் இளநீர் தன்னை
நந்திவா கனனுக் கேற்றின்
நாடொறும் செல்வம் ஆர்ந்தே
பந்தபா சங்கள் நீங்கிப்
பரஞானம் மருவிப் பற்றற்
றுந்துசா யுச்சி யத்தை
ஒருவாமல் மருவு வாரே. (10)

உரை :- 'சந்திர கௌளி' எனப் பெயர் பெற்ற இளநீரைச் சிவபெருமானுக்கு ஆக்கினால், நாள்தோறும் செல்வம் வளர்ச்சியடைய இன்புற்று வாழ்ந்து, பின் சாயுச்ச பர முத்தியைத் தப்பாமல் அடைவார்கள்.

குறிப்பு :- இது நில வொளியை மிக வாங்குதலால் இப் பெயர் பெற்றது.

123 இன்னசந் திரகௌ ளிப்பேர்
இளநீரை மாசி மாதம்
மன்னிய சிவநி சிக்கண்
மருவிய யாமந் தோறும்
பன்னும்ஆ யிரம தாகப்
பரமனுக் காட்டி னோர்கள்
தன்னிகர் ஞானம் மேவிச்
சாயுச்சி யத்தில் சேர்வார். (11)

உரை .- இந்தச் சந்திர கௌளி இளநீரை மாசி மாதத்தில் மகா சிவராத்திரியில் ஒவ்வொரு சாமத்திலும் ஆயிரம் ஆயிரமாகக் கொணர்ந்து சிவபெருமானுக்கு அபிடேகம் செய்தவர்கள் நிகரற்ற ஞானத்தைப் பெற்றுச் சாயுச்ச பரமுத்தியை அடைவார்கள்.

## இளநீர்களின் சிறப்பு வரிசை

124 சகத்திர மான பச்சை
தன்னிள நீரின் மிக்காய்
வகுத்தசெவ் விளநீர் ஒன்று
மருவும்;இன் னதும்அவ் வாறே
தொகுத்ததில் அதிக மாகும்
சூரிய கௌளி ஒன்று ;
மிகுத்தஆ யிரம்இ தற்கு
மிக்கது சந்த்ர கௌளி. (12)

**உரை :- பச்சை யிளநீர் ஓராயிரத்திற்கு நிகரானது ஒருசெவ்விளநீர். அவ்வாறே செவ்விளநீர் ஓராயிரத்திற்கு நிகரானது சூரிய கௌளி இளநீர். அந்தச் சூரிய கௌளி இளநீர் ஓராயிரத்திற்கு நிகரானது சந்திர கௌளி இளநீர்.**

## வாழை - பூவன் பழம்

125. பூங்கத லிப்ப லத்தைப்
புனிதனுக் கேற்றினோர்கள்
ஓங்கிய மன்ன ராகி
உலகெலாம் பரித்து வாழ்ந்தே
தேங்கமழ் கற்ப கப்பூஞ்
செழுநிழ லதனின் மேவி
ஆங்குள போகம் ஆர்ந்தே
அரனுரு வடைகு வாரே. (13)

**உரை :- 'பூவன்' என்னும் வாழையின் பழத்தைச் சிவபெருமானுக்கு ஆக்கினவர்கள், உயர்த்த அரசர்களாய் உலகம் முழுதையும் ஆட்சி செய்து வாழ்ந்து, பின்பு**

இந்திர லோகத்தை அடைந்து, கற்பகச் சோலையில் இன்பங்கள் பலவற்றையும் நுகர்ந்து, பின் சிவபெருமானது திருவருளைப் பெறுவார்கள்.

## பலவகை வாழைப் பழம்

126. பலவிதக் கதலி நல்கும்
பழத்தினைப் பரனுக் கேற்றின்
உலகெலாம் பரித்து வாழ்ந்தே
உடையபுத் திரர்கள் தம்மைக்
குலவவே பெற்று வாழ்ந்து
கொண்டதோர் வடிவம் நீங்கி
அலகில்சீர்ச் சிவலோ கத்தில்
அனுதினம் அமரு வாரே. (14)

உரை :- பல இனத்து வாழைகளின் பழங்களைச் சிவபெருமானுக்கு ஆக்கினால், உலகம் முழுவதையும் தாங்கும் அரசராய் வாழ்ந்து, நற்குணம் உடைய பிள்ளைகளையும் பெற்றுப் பின் இவ்வுடம்பை விட்டுச் சிவலோகத்தை அடைந்து வாழ்வார்கள்.

குறிப்பு :- பல இன வாழைகளாவன, மலை வாழை, கற்பூர வாழை, இரசதாளி வாழை, செவ்வாழை, பச்சை வாழை முதலியன. பேயன் வாழைப்பழம் கடவுளர்க்கு ஆகாது. பரித்தல் - தாங்குதல்.

## வாழைக் காய்

127 வாழையின் காயை நம்பன்
மகிழ்தர நிவேதித் தோர்கள்
ஏழெனும் பவத்தில் செய்த
இடர்ப்பவம் எல்லாம் நீங்கிக்

கேழில்சந் ததிகள் மல்கக்
கிலேசம்இல் லாது போகம்
ஊழிதங் கிடநு கர்ந்தே
உயர்சிவ லோகம் சேர்வார். (15)

உரை :- வாழைக் காயை (கறியாகச் சமைத்து)ச் சிவ பெருமானுக்கு நிவேதித்தவர்கள், ஏழு பிறப்புக்களில் செய்த பாவங்களின் நீங்கி, நிகரற்ற நல்ல சந்ததிகளை மிகப் பெற்றுக் கவலையில்லாமல் இன்பத்துடன் நெடுங்காலம் வாழ்ந்து, பின்பு உயரிய சிவலோகத்தை அடைவார்கள்.

### வாழை நார்

128 கன்னிவா ழையின்நார் ஈசன்
கருணைஆர் திருமே னிக்கே
மன்னிய பூவி னோடே
மருவிட ஏற்றி னோர்கள்
பொன்னணி ஆடை யாதி
பூச்சியம் பொருந்த வாழ்ந்து
தன்னிகர் சாமீ பத்தில்
சந்ததம் சார்ந்தே வாழ்வார். (16)

உரை :- குலை ஈனாத இள வாழையின் நாரினைப் பூவோடு சேர்த்துச் சிவபெருமானது திருமேனியில் சாத்தினவர்கள், பொன், அணிகலம், ஆடை முதலியவை சிறப்புள்ளனவாக வாய்க்கப் பெற்று வாழ்ந்து, பின்பு சாமீப பதவியில் வீற்றிருப்பார்கள்.

குறிப்பு :- பூச்சியம் - சிறப்பிக்கப்படுதல்.

## வாழை இலை

129 அரம்பையின் இலைகு ருத்தை
அரன்நிவே தனம்அ ருந்த
விரும்பீஈந் திடுவோர் என்றும்
வேண்டிய போகம் எல்லாம்
பொருந்தவே நுகர்ந்து பின்னர்ப்
பொன்னுல கடைந்து மேலாய்
இருந்துபோ கங்கள் மாந்தி
எழிற்சிவ லோகம் சேர்வார். (17)

உரை :- வாழையின் இலையை யாயினும், குருத்தை யாயினும் சிவபெருமானுடைய நிவேதனத்தைப் படைத்தற்கு அன்புடன் கொடுத்தவர்கள், இவ்வுலக இன்பங்களை யெல்லாம் நன்கு நுகர்ந்து, பின் பொன்னுலகத்தை அடைந்து அங்குள்ள போகங்களை நுகர்ந்து, அப்பால் சிவலோகத்தை அடைவார்கள்.

## நெற் கதிர்

130, நெற்பயிர் இலையை ஈசன்
நீள்முடிக் கேற்றி னோர்கள்
சொற்படு சென்மம் ஒன்றில்
சூழ்ந்துள பாவம் நீங்கி
எற்படு பரிதி ஆரும்
எழிற்பதம் எய்தி இன்பம்
கற்பம்ஒன் றார்ந்து பின்னர்க்
கயிலையஞ் சயிலம் சார்வார். (18)

உரை :- நெற் பயிரினது இலையை (அதன் கதிரோடு) சிவபெருமானுடைய திருமுடியில் சாத்தினவர்கள், எடுத்த

பிறப்பில் செய்த பாவங்களின் நீங்கி, ஒளி பொருந்திய சூரிய மண்டலத்தை அடைந்து, ஒரு கற்பகாலம் அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழ்ந்து, பின்பு திருக்கயிலாய மலையை அடைந்து (சிவகணங்களோடு ஒன்றி) வாழ்வார்கள்.

## வெண்கரும்பின் சாறு

131. வெண்பெருங் கரும்பின் சாற்றை
விமலனுக் காட்டி னோர்கள்
நண்புடை அரிவை மார்கள்
நயமொடு நாளும் சூழ
எண்புவி முழுதும் காத்தே
ஈசன துலகில் எய்திப்
பண்பொடு சாரு பத்தில்
பதிந்தின்பம் அருந்தி வாழ்வார். (19)

உரை :- வெண்கரும்பின் சாற்றைச் சிவபெருமானுக்கு அபிடேகம் செய்தவர்கள், மகளிர், உறவுடனும், அன்புடனும் சூழ்ந்திருக்க, எட்டுத் திக்கையும் ஆள்கின்ற அரசராய் வாழ்ந்து, பின் சிவலோகத்தை அடைந்து சாரூப பதவியில் இன்புற்று வாழ்வார்கள்.

## செங்கரும்பின் சாறு

132. செங்கரும் பின்சா றீசன்
திருமுடிக் காட்டி னோர்கள்
அங்கண்மா ஞால மெல்லாம்
அன்பொடு காத்து மேனி

மங்கல மாகப் போந்து
வாழ்ந்துவா னுலகை ஆண்டே
செங்கண்மால் காணொ ணாத
சிவபதம் சென்று சேர்வார். (20)

உரை :- செங்கரும்பின் சாற்றைச் சிவபெருமானது திருமுடியில் அபிடேகித்தவர்கள், அழகிய இடம் பரந்த உலகம் முழுவதையும் அன்புடன் புரந்து, அங்ஙனம் வாழ்ந்த உடம்பு மங்கலமானதாக உலகத்தார் போற்றும் படி அதனை விடுத்துச் சுவர்க்க லோகத்தை அடைந்து அதனை ஆட்சிசெய்து, திருமாலும் அறிய இயலாத சிவலோகத்தை அடைவார்கள்.

சிறுகரும்பின் சாறு

133. ஆலைஆர் சிறுக ரும்பை
அமலனுக் கேற்றி னோர்கள்
சாலவே பூலோ கத்தில்
சாற்றிய புருட ராகி
ஏலவே போக மெல்லாம்
இசைந்தின்ப வார்த்தை பேசும்
சீலராய் இருந்து பின்பு
சிவபதம் அடைந்து வாழ்வார். (21)

உரை :- ஆலையில் ஆடப்படுகின்ற சிறு கரும்பின் சாற்றினைச் சிவபெருமானுக்கு அபிடேகித்தவர்கள், நிலவுலகில் சிறந்த ஆடவராய்த் தோன்றி இன்பங்களை மிக நுகர்ந்து, இனிய சொல்லையே பேசுபவர்களாய் விளங்கிப் பின்பு சிவலோகத்தை அடைந்து வாழ்வார்கள்.

குறிப்பு :- 'ஆலை ஆர் கரும்பு' என்றது, இன அடையாகவே கொள்ளத்தக்கது. தக்க கருவிகொண்டு பிளந்து

கையால் நசுக்கிப் பிழிந்த கருப்பஞ்சாறே சிவபெருமானது அபிடேகத்திற்கு உரியது.

### அறுகம் புல்

134. அறுகுமூ விலைக்கொ ழுந்தை
அரன்றனக் கணிந்தோர் என்றும்
பெறலரி தான போகம்
பெற்றுவாழ்ந் திருந்த பின்னர்
மறிமழுத் தரித்தோன் போல
வடிவுடை யவராய் மன்னி
உறுபொரு ளாகும் முத்தி
உற்றின்பம் உறுவர் மாதோ. (22)

உரை :- அறுகம் புல்லினது மூன்று இலையாய் உள்ள கொழுந்தைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், யாரும் பெறுதற்கரிய போகங்களைப் பெற்று நெடுநாள் வாழ்ந்த பிறகு சிவசாரூபம் பெற்றிருந்து, பின்பு முடிவாக அடையத் தக்க பரமுத்தியை அடைவார்கள்.

குறிப்பு :- 'கொழுந்து' என்றதனால், உச்சியில் உள்ளதையே கொய்யவேண்டும் என்பதும், 'மூவிலை' என்றதனால் அது மூன்று இலையாகவே இருக்கும்படி கொய்யவேண்டும் என்பதும் விளங்கும். பத்திரமாகாது புல்லாய் இருத்தலால் இங்குக்கூறினர். அடுத்துத் தருப்பைப் புல் முதலியவற்றைக் கூறுவதும் இதுபற்றியேயாம்.

### தருப்பைப் புல்

135. சகலதே வருக்கும் நாணல்
சார்ந்ததண் தருப்பைப் புல்லைத்
திகழஎம் பரனுக் கேற்றின்
செய்தபா வங்கள் தீரும் ;

புகழுவே மருவு போகம்
பொருந்துநற் புத்தி கூடும்;
அகமகிழ் சிவலோ கத்தில்
அனுதினம் அமர லாகும். (23)

உரை :- மற்றை எல்லாத் தேவர்கட்கும் நாணலை (வெட்கத்தை)த் தருவதாகிய தருப்பைப் புல்லைச் சிவபெருமானுக்கு ஆக்கினால், செய்த பாவங்கள் யாவும் நீங்கும். புகழோடு வருகின்ற இன்பத்தையே துய்க்கின்ற நன்மனம் உண்டாகும். பின்னர்ச்சிவலோகத்திலும்அமர்ந்திருக்கலாம்.

குறிப்பு :- தருப்பை 'நாணல்' எனப்படுவதற்கு இவ்வாறு நயம்பட ஒருகாரணம் கற்பித்துக் கூறினர். தருப்பைப் புல் நின் மலத்திற்கு உரியது. ஏனைத் தேவர்கள் சமலராதலின், அஃது அவர்க்கு நாணத்தைத் தரும் என்றபடி.

136. வளர்ந்திடும் முஞ்சிப் புல்லை
வல்லையில் அரைநா ணாக்கி
உளந்திகழ் அன்பி னாலே
உமைஒரு பாகற் கேற்றின்
கிளர்ந்திடும் பணிகள் பூண்டு
கிலேசம்அற் றிருந்து வாழ்ந்தே
சளந்தவிர் சிவலோ கத்தில்
சார்ந்துவாழ் வார்கள் தாமே. (24)

உரை :- நன்கு வளர்ந்த தருப்பைப் புல்லால் அரைநாண்செய்து அன்போடு சிவபெருமானுக்கு அணிவித்தால் நல்ல அணிகலன்களைப்பெற்று அணிந்து, கவலையில்லாமல் வாழ்ந்து, பின் துன்பம் அற்ற சிவலோகத்தில் சேர்ந்து வாழ்வார்கள்.

குறிப்பு :- தருப்பைக்கு, 'முஞ்சி' என்பதும் பெயர். சளம் - சலம்; சஞ்சலம்.

## குச்சுப் புல்

137. அரிந்திடுங் குச்சுப் புல்லை
அரன்திரு மேனி யெங்கும்
தெரிந்திடச் சாத்தி னோர்கள்
சென்மம்நூற் றிற்செய் பாவம்
திரிந்திடும்; அறிவிற் பற்றுந்
திரிமலந் தேய்ந்து தீயும்;
பருவரல் தீர்ந்து ஞான
பரபோகம் உறுவர் மாதோ. (25)

உரை :- அரிந்தெடுத்துக் குச்சாகக் கட்டிய புல்லைச் சிவபெருமானது திருமேனி முழுதும் (பற்று நீங்கி) நன்கு விளங்குமாறு சாத்தினவர்கள் செய்த பாவங்கள் அழியும்; மற்றும் அவர்தம் ஆன்ம அறிவைப் பற்றியுள்ள மும்மலங்கள் வலிமை குன்றிக் கெடும். பிறவித்துன்பம் நீங்கப்பெற்று ஞானத்தின் வழிப் பேரின்பத்தைப் பெறுவார்கள்.

குறிப்பு :- குச்சாகக் கட்டப்பட்டதற்கே 'குச்சுப் புல்' என்று பெயரல்லது, அப்பெயருடைய புல் ஒன்று இல்லை. அதற்கு ஆகத்தீக்க புற்கள் உள. பின்வரும் வேர்களும் ஆகும்.

## இலாமிச்சை வேர்

138. மன்னிலா மிச்சை வேரின்
மருவிட விசிறி செய்தே
தன்னிகர் பரனுக் கீந்தோர்
தக்கசெல் வங்கள் சார்ந்தே

இந்நிலந் தன்னில் மாதர்
இச்சைகூர்ந் திடஇ ருந்தே
பொன்னுல கடைந்து பின்னர்ப்
போதுவர் சிவலோ கத்தில். (26)

உரை :- இலாமிச்சை வேரினால் விசிறி செய்து சிவபெருமானுக்குக் கொடுத்தவர்கள், இவ்வுலகில் தகுதி வாய்ந்த செல்வகளைப் பெற்று, மங்கையர் விரும்ப மகிழ்வுடன் வாழ்ந்து, பின் பொன்னுலகத்தை அடைந்திருந்து, அப்பால் சிவலோகத்தை அடைவார்கள்.

குறிப்பு :- இலாமிச்சை, 'விலாமிச்சை' என்றும் சொல்லப்படும்.

இருவேலி வேர்

139. இருவேலி வேரில் ஒன்றை
ஈசனுக் கேற்றி னோர்கள்
தருவாரும் நிழலில் சாரும்
சகத்திர அக்க னாகி
உருவாரும் அரம்பை மாதர்
ஒருவாமல் உகந்து சூழப்
பெருவாழ்வு மேவிப் பின்னர்ப்
பிரிவில்சா லோகம் சேர்வார். (27)

உரை :- இருவேலி வேர் ஒன்றைச் சிவபெருமானுக்குச் சாத்தினவர்கள், கற்பக தருவின் நிழலில் வாழ்கின்ற இந்திரனது பதவியைப் பெற்று, அழகிய தேவமாதர் நீங்காது சூழ்ந்திருக்கத் தேவ வாழ்வு வாழ்ந்து, பின்னர் நீங்காத சாலோக பதவியை அடைவார்கள்.

குறிப்பு :- சகத்திர அக்கன் - ஆயிரங் கண்ணன்.

## பொது

140. காய்மேலாம் பூவை யெல்லாம்
கமழ்இத ழெலாம்பி ரித்தே
சேமேலான் பாதம் போற்றிச்
சிறந்திடச் சாத்த லாகும் ;
காய்மேலாய் இருந்தா லுந்தான்
கன்னிகா ரத்தின் பூவே
ஆம் ;மேலாங் காயை நீக்கி
அணியலாம் கமலப் போதே. (1)

உரை :- (இது முதல் ஒன்பது செய்யுட்களால் சில பொதுப் பொருள்கள் கூறுகின்றார்.)

'பூசைக்கு ஆகும்' எனப்பட்ட பூக்கள் காய்ப்பு உடையனவாகி மேலே காய் காணப்பட்டிருக்குமாயின், காயை விடுத்து இதழை மட்டும் கொய்து. இடப வாகனத்தின்மேல் வருபவராகிய சிவபெருமானைப் பூசித்துப் பயன் பெறுதற்குச் சாத்தலாகும். கோங்கம் பூவைக் காயோடேயும் கொய்து சாத்தலாம். தாமரைப் பூவைக் காயோடே கொய்து, பின்பு காயை நீக்கிவிட்டுச் சாத்தலாம்.

141. சிவந்தன எல்லாம் கோபம்
சேரும் ;பொன் னிறப்பூ எல்லாம்
நிவந்திடும் போகம் எய்தும் ;
நிலவிய வெண்பூ எல்லாம்
தவந்தரு ஞானம் மேவும் ;
சாத்துவோர் சாலோ காதி
உவந்தமுப் பதமும் பெற்றே
உயர்ந்திடும் ஞானம் சேர்வார். (2)

உரை :- (பூசைக்கு ஆகும் எனப்பட்ட பூக்களில்) சிவப்பு நிறப் பூக்கள் எல்லாவற்ருலும் கோபம் மிகுவதாகும் (என்றது பகைவரை வெல்லலாகும் என்றபடி). பொன்னிறப் பூக்கள் எல்லாவற்ருலும் எண்ணிய போகங்கள் கிடைக்கும். வெண்ணிறப் பூக்கள் எல்லாவற்ருலும் தவத்தால் தரப்படுகின்ற ஞானம் உண்டாகும். இன்னும், இம்மூவகைப் பூக்களாலும் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதவிகள் கிடைக்கும். எல்லாப் பூக்களாலும் அவற்றைச் சாத்தினேர் முடிவில் ஞானத்தைப் பெறுவார்கள்.

142. இன்னநன் மலர்களுள்தாம்
எவ்வித மலர்க ளுந்தாம்
துன்னிய வனத்தி ருந்தால்
சுத்தமாம் ; இவற்றை யெல்லாம்
பன்னகா பரணற் கேற்றின்
பாரின்ப போகம் துய்த்தே
பொன்னுல கடைந்து போகம்
பொருந்தியே முத்தி சேர்வார். (3)

உரை :- சொல்லப்பட்ட இம்மலர்களில் யாதொரு வகை மலரும் காட்டிலிருந்து கிடைக்குமாயின் மிகச் சிறந்ததாகும். அதனைச் சிவபெருமானுக்குச் சாத்தினல், இவ்வுலக இன்பத்தையும் துய்த்துப் பின் பொன்னுலக போகத்தை நுகர்ந்து, பின்பு முத்தியை அடைவார்கள்.

143. செண்டுமுற் பணித்த யாவும்
சேர்த்தணி தலிற் சிறப்பாம் ;
மண்டிய மாலை யாவும்
மற்றதில் அதிக மாகும் ;

எண்டவிர் சரங்க ளெல்லாம்
இவற்றினும் அதிக மாகும் ;
ஒண்டொடி பாகன் மீதில்
ஒவ்வொன் ருய் அணிதல் மிக்காம். (4)

உரை :- சிவபெருமானுக்கு முன் சொன்ன மலர்களை மொத்தமாக அள்ளிச் சாத்துவதை விடச் செண்டாகக் கட்டிச் சாத்துதல் சிறப்பு. எவ்வகை மாலையாயினும் அது செண்டைவிடச் சிறந்தது. சரங்கள் மாலைகளைவிடச் சிறந்தன. மலர்களை ஒவ்வொன்ருக எடுத்துச் சாத்துதல் எல்லாவற்றையும் விடச் சிறந்ததாகும்.

144. அந்திட்டி யினில்ஓர் கன்ம
மானதற் கலரி யின்கண்
வந்திட்டும் அரும்பு கூடும் ;
மற்றதற் காகா தெல்லாம்
கொந்திட்டும் அரும்பைக் கொய்தல் ;
கோலமார் சிவலிங் கத்தில்
ஐந்திட்டும் இருபான் பேதம்
ஆக்கியு பேத மாகும். (5)

உரை :- அந்தியேட்டியாகிய ஒரு செயலுக்கு மட்டும் அலரிப் பூவை அரும்பாகக் கொய்தும் சாத்தலாம். மற்ற யாதொரு செயலுக்கும் எந்த மலரையும் அரும்பாகஇருக்கும் பொழுது கொய்தல் கூடாது. இனிச் சிவலிங்கத்திருமேனி ஒன்றிற்ருனே மாகேசுர மூர்த்தம் இருபத்தைந்தும் தங்கியிருக்கும். (அதனுல், எந்த மாகேசுர மூர்த்தத்தையும் நினைத்துச் சிவலிங்கத்தில் வழிபடலாம் என்றபடி.)

145. சிவனுக்கே என்று வைத்த
திருநந்த வனத்தெஞ் ஞான்றும்
பவமுற்று மரம்பூ காய்வேர்
பத்திரம் பலம்நார் பட்டை
அவமுற்ற அறிவி னாலும்
அறியாமை யாலும் கொண்டோர்
கவலுற்ற நெஞ்சி னோராய்க்
கனலெரி நரகிற் சேர்வார். (6)

உரை :- சிவபெருமானுக்கு என்று வைத்த திருநந்தன வனத்திலிருந்து, அறிந்தோ, அறியாமலோ மரம், பூ, காய், வேர், பத்திரம், பழம், நார், பட்டை முதலியவைகளில் எந்த ஒன்றைக் கைக்கொண்டு சென்றவரும் மனக்கவலை உண்டாகப்பெற்றுத் துன்பவாழ்க்கையில் வாழ்நாளைக் கழித்துப் பின்பு எரிவாய் நரகம் புகுவார்கள்.

குறிப்பு :- 'பவமுற்று' என்பது 'உட்சென்று' என்றவாறு.

146. குருலிங்க வேடத் தோரைக்
குறித்துவைத் திடும்பூ வாதி
குருலிங்க வேடத் தோர்தாம்
கொடுத்திடிற் கொள்ள லாகும் ;
குருலிங்க வேடத் தோர்தம்
கூரரு ளின்றிக் கொண்டோர்
எரிதங்கு நரகில் வீழ்ந்தே
இரவிஉள் ளளவும் ஏறார். (7)

உரை :- 'குரு வழிபாட்டிற்கு' என்றும், 'அடியவர் வழிபாட்டிற்கு' என்றும் குறிப்பிட்டு வைக்கப்பட்ட பூ முதலியவற்றை அவர்கள் திருவுளம் இசைந்துகொடுப்பார்க

ளாயின், பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் இசைவின்றி அவற்றைக் கைக்கொண்டவர் எரிவாய் நரகில் வீழ்ந்து சூரியன் ( சந்திரன் ) உள்ள அளவும் வருந்துவர்.

குறிப்பு :- 'லிங்கம்' என்பது இங்கு, 'சிவம்' என்னும் பொருளதாய் நின்றது.

147. ஆதலால் பூவ ணத்தில்
அமர்ந்தன எல்லாம் ஈசன்
பாதபங் கயத்தில் ஏறப்
பண்ணிட வேண்டும் என்றே
ஓதும்ஆ கமங்கள் எல்லாம் ;
உரவோர்கள் ஈத றிந்தே
நீதியாய் அன்பாற் போற்றின்
நிமலமாம் முத்தி சேர்வார். (8)

உரை :- மேற் கூறியவாற்றால், 'திருநந்தவனத்தில் உள்ள யாவற்றையும் சிவபெருமானுக்கே ஆகும்படிசெய்தல் வேண்டும்' என்று சிவாகமங்கள் எல்லாம் சொல்லும். இதனை அறிவுடையோர் அறிந்து, இதற்குமாறனசெயல்கள் நிகழாவண்ணம் பாதுகாப்பார்களாயின், அவர்கள் மலம் நீங்கிய பர முத்தியை அடைவார்கள்.

148. விதியினால் உரைத்த தன்றி
வேண்டிய தேதோ எல்லாம்
அதிகபத் தியினால் ஈசன்
அடியிணைக் கணிய லாகும் ;
பதிபசு பாசம் தேர்ந்தோர்
பகர்மொழி விதியே யாகும் ;
கதிதரும் பாசம் நீங்கும் ;
கழறொணா முத்தி காட்டும். (9)

உரை:- விதியாகச் சொல்லப்பட்ட பூக்களல்லாமல், அவரவர் தங்களுக்கு நல்லனவாய்த் தோன்றி விருப்பம் தருகின்ற பூக்களையும், அவ்விருப்பம் காரணமாகச் சிவபெருமானுக்குச் சாத்தலாம். இனிச் சிவாகமங்களை உணர்ந்தோர் சொல்லும் சொல்லே விதியாகும். ஆதலால் அவர்கள் சொற்படி செய்யின், பிறப்பைத் தருகின்ற பாசம் நீங்கும். சொல்லுதற் கரிய முத்தியை அச் செயல்கள் தரும்.

புட்ப பலன் உரையுடன் முற்றிற்று.

இதன் பின்னர்க் கீழ்வரும் தனிப்பாடல் ஒன்று காணப்படுகின்றது; அஃது நூலாசிரியர் செய்ததாகத் தோன்றவில்லை:

குன்மமொடு சுரம்தொழுநோய் பிறவும்வருத் திடினும்
குன்ருதென்றும் [மனம்
தன்னுடைஆன் மார்த்தலிங்கம் தான்பூசித் திடுவதன்றி
அயலார் தீண்டி
முன்னிஅருச் சனைசெயுமென் றுரையார்;தம் மனைவி
முகந்தே உண்ணென் [நலம்
றன்னியரைப் பொருந்தவிட்டுப் பார்ப்பரோ பெரியர்!
அதுவா மன்றே. [இது